தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உச	திருவள்ளுவர் ஆண்டு கக௮ம சருவதாரி—கார்த்திகை, மார்கழி 1948—நவம்பர், டிசம்பர்	மலர் அ, கூ

பொழிற்றொண்டர் கருத்துரைகள்.

பொங்கல் வாழ்த்து.

இந்தப் பொங்கற் புது நாளிலே, திருவள்ளுவ ராண்டு கூகூ௮ம தொடக்கத்திலே, தமிழ்ப் பெருமக்களுக்கும் ஏனைய தமிழன்பர்களுக்கும் திருவருளை நினைந்து அன்பான வாழ்த்துக் கூறுகின்றோம்.

பொங்கல், தமிழர்க்கு ஒரு சிறந்த தனித் திருநாளாகும். இயற்கை அறிஞர் ஒருவர் கருத்தின்படி, உலகத்து முதன் முதல் தோன்றிய நிலப் பரப்பு, நம் நாட்டிற்குத் தெற்கே இருந்த தமிழக மாகும். அத் தமிழகத்தே முதன் முதல் தோன்றியவன் தமிழன். அவன் முதற் றொழில் உழவு. தமிழ வேளாண் பெருமகன் தன் தொழிலில் பாடுபட்டான். பட்டபாட்டின் பலனைக் கண்டான். கதிரவன் ஆதிபகவ னுதலை உணர்ந்தான். ஆதிபகவன் திருவருளை உணர்ந்தான். தனக்குப் பொருள் அருளிய அவனுக்கு அருளிய பொருளை ஆக்கிப் படைத்தான், கும்பிட்டான், நன்றி செலுத்தினுன். தன் தொழிலில் உற்ற துணைவரை யெல்லாம் பாராட்டினுன். துணைவரோடு உண்டான், மகிழ்ந்தான்.

பகடு நடந்த கூழ் எனக் கண்டான். அப் பகட்டுக்குத் திருவிழாச் செய்தான். அதன் ஒப்பிலா உதவியைப் பாராட்டினன். அழகு செய்தான், சோறு ஊட்டினன். வணங்கினன்.

பின்னர்த்தான் தன்னையும் தன் பெண்டு பிள்ளைகளையும் நினைந்தான், அளவளாவி மகிழ்ந்தான்.

நன்றி செலுத்திய நன் மகன் காட்டிய நல்வழியில் நாமும் நடக்கின்றோம்.

நாடு செழிக்க, நலம் பெருக, நம் நற்றமிழ்ப் பெருந் தாய் தனிச்சிறப்புப் பெற, நற்றமிழ் மக்கள் நல்வாழ்வு பெற, ஆதிபகவன் திருவருளை வழுத்துகின்றோம்.

நமக்குப் பொங்கல் வாழ்த்து அனுப்பிய பல அன்பர்களுக்கும், சிறப்பாகத் திருவாளர்கள் தமிழ்த் தென்றல் ஆசிரியர் வே. வ. இராமசாமி, மா. வேணுகோபாலன், தமிழர் நல் வாழ்க்கைக் கழக அமைச்சர், பி. என். குருசாமி, உ. ராம. மெ. சுப. சேவு. மெ. மெய்யப்பச் செட்டியார், ப. சாமி. வேங்கட கிருட்டின பிள்ளை, சாந்தி இல்ல அமைச்சர், திருமுட்டம் தமிழ்க் கழகத்தார், அ. வேங்கடாசலம், த. ம. ஆறுமுகம் பிள்ளை அவர்களுக்கு எம் உளமார்ந்த நன்றி கூறுகின்றோம்.

‘கலைக்கதிர்’ காட்டுகின்றது.

?

தமிழர் :— விளிம் பில்லாத தீர்த்த பாத்திரம் (லெக்சிகனில் கண்டது).

வேற்று மொழிச் சொல்லைச் சேர்த்துக்
கொண்டதன் **விளைவு !**

நூல் மதிப்புரை.

தமிழ் நூல்களைச் சிறந்த முறையில் அழகாகப் பதிப்பித்து வெளியிட்டுத் தமிழ்த் தொண்டாற்றும் பணியைத் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தார் முதன் முதலாகத் தொடங்கி வழி காட்டினர். அவ்வழியைப் பலரும் பின்பற்றியதன் விளைவாகப் பல சிறந்த நூல்கள் வெளிவருகின்றன. அவற்றுட் சிலவற்றைக் கீழே குறிப்பிடுகின்றோம்.

"திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்" திரு. மு. வரதராசன், பொதிகைப் பதிப்பகம், கடலூர் ரூ. 7.

திருக்குறட் பயிற்சியில் ஊக்கங் கொண்டுள்ள தமிழ்ப் பெருமகனார் கல்வியமைச்சர் திரு. T. S. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள் திருக்குறட் பெருமையைப் பறைசாற்றியதன் விளைவாகத் திருக்குறட் பதிப்புகள், பகுதியாகவும், முழுமையாகவும் பல வெளிவருகின்றன. அத்தகைய இந்நூல் சிறந்தது. இந்நூல், திருவள்ளுவர் வாழ்க்கையை எவ்வாறு ஆராய்ந்துள்ளனர்; அவர் கண்டு விளக்கிய உண்மைகள் யாவை; அந்த விளக்கங்கள் இன்றைய வாழ்க்கைக்கு எவ்வளவில் பயன்படுவன என்பனவற்றை அழகாகவும் தெளிவாகவும் விளக்குகின்றது. யாவரும் படித்துப் பயனுற்று இன்புறத் தகுந்தது.

இந் நூலாசிரியருக்கும், இந்நூலை வெளியிட்டுள்ள பொதிகைப் பதிப்பகத்தாருக்கும் தமிழுலகம் பெரிதும் நன்றி பாராட்டும் கடப்பாடுடைத்து.

குழந்தைக்கும் குறள் நூறு.

ஆ. கோவிந்தராசு, அணா 3.

குழந்தைகள் எளிதாகப் படித்துப் பயன் பெறத்தக்க குறட்பாக்களைத் தொகுத்துப் பொன்மலை, திருக்குறள் கழகம் வெளியிட்டுத் திருக்குறட் பணி ஆற்றுகின்றது.

தமிழ் கற்கும் முறை.

ஆசிரியர் சா. வேதமுத்து, பாலகுருகுல வித்தியாலயம், விருதுநகர் ரூ. 1—8—0.

இந்நூல் விரும்பத்தக்க முறையில் எழுதப் பெற்றுள்ளது. இந்நூலைப் படிப்பவர் எழுத்துப் பிழை, சொற்பிழை, சந்திப் பிழை, வாக்கியப் பிழை ஆகிய பிழைகளில் ஒன்றுமில்லாமல் எழுதலாம். தமிழர் ஒவ்வொருவர் கையிலும் இந்த நூல் இருக்கவேண்டியது இன்றியமையாதது.

பல அழகான திங்கள் வெளியீடுகள் வெளியாகின்றன. அவற்றுள் கீழ்க்குறித்தன சிலவாம்.

கலைக் கதிர் - திங்கள் வெளியீடு – கோயமுத்தூர்.

ஆண்டுக் கட்டணம் ரூ. 6

கலைமகள் ஒப்பது, கண்கவர் வனப்பது, நல்ல முறையில் நல்ல தாளில் நல்ல கட்டுரைகள் வெளிவருகின்றன. 'அறிவு பரப்பும் நல்ல தொண்டைச் செய்வது' என்பது உண்மை. 'தமிழகத்துக்கு வேண்டிய பொருள் எங்கே இருந்தாலும், அதனைக் கொண்டுவந்து சேர்க்கும் அரும் பணியைக் கலைக்கதிர் ஆற்றும் என்பது' உறுதி.

கலைக் களஞ்சியம் - சென்னை - வெளியீடு.

ஆண்டுக் கட்டணம் ரூ. 3.

'கலைக் களஞ்சியத்திற்குத் தலைக் களஞ்சியமாக விருக்கின்றது. யாவரும் படிக்கத் தகுந்த நல்ல கட்டுரைகள் மலிந்திருக்கின்றன. கலை வல்லுநர் பலர் எழுதுகின்றனர்.

தமிழ்த் தென்றல் - விருதுநகர் வெளியீடு.

ஆண்டுக் கட்டணம் ரூ. 4.

தமிழ்த் தாய்ச் சிறப்புக்காக வெளிவரும் பெருமை யுடையது – சிறந்த கட்டுரைகள் மலிந்துள்ளன - 1948 ஆவது ஆண்டு முத்தமிழ்ச் சித்திர மலர் உண்மையாகவே முத்தமிழ் மணம் வீசுகின்றது.

* * * * *

திருக்குறள் நாட்குறிப்பு:

தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்
பதிப்புக் கழகம், சென்னை. ரூ. 1—8—0

திருக் குறட் பயிற்சியைப் பல்லாண்டு முன்னரே எதிர் நோக்கி, அதனை எளிதிற் பயில வழி தேடியவர்கள் கழகத் தார் - இவ்வாண்டு நாட் குறிப்பு முன்னைய ஆண்டுகளி னும் மிக மிக அழகாக இருக்கிறது. திருக்குறள் நூலை மறுபடியும் தொடங்குகின்றது.

* * * * *

பூப்பிள்ளை

பஞ்சாக்கர சிந்தனை

ஞான பூசை

திருப்பனந்தாள், தருமபுர ஆதீனங்கள், கொண்ட முறைப்படித் திருவாடுதுறை ஆதீன 22 ஆவது வெளியீ டாக, ஆதின வித்துவான் திரு. த. ச. மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களால் ஆராய்ந்து வெளியிடப்பட்ட சைவ சித்தாந்த சமய நூல்கள் இவை.

—

கலைக் களஞ்சியம்

தமிழ் மொழியில் கலைக்களஞ்சியம் ஒன்று எழுதப் பெறும் முயற்சி தொடங்கியிருப்பது தமிழ் மக்கள் அறிவர். இதுவும் பெரும் பொருட் செலவில், சிறந்த முறையில், புதிய வெளியீடாக வரவிருக்கின்றது. இந்த முயற்சியைத் தொடங் கியவர்கள் உண்மைத் தமிழ் மகனும், சென்னைக் கல்வி யமைச்சரும் ஆகிய திருவாளர் T. S. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள் ஆவார்கள். தம் நல மற்ற இப் பெருந் தகையாளர்க்குத் தமிழுலகம் பெரிதும் நன்றி பாராட்டும் கடப்பாடுடையது. திரு. செட்டியா ரவர்கள் உளங் கொண்டு தொடங்கிய இப் பணி சிறப்பாக நிறைவுறுதற்கு ஆண்டவன் திருவருள் துணை நிற்கும் என்பது ஒருதலை. உண்மைத் தமிழன்பர் ஆசையும் இதுவே ஆகும். இப் பணி இனிது நிறைவேறுதற்குத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் இயன்ற வகையிலெல்லாம் துணை நின்று ஒத்துழைக்கக் கடமைப் பட்டவர்க ளாவார்கள்.

கலைக்களஞ்சியம் குறித்த பணி சென்ற ஓராண்டாக நடந்து வருகின்றது. இந் நூலின் மாதிரிப் பக்கங்கள் தமிழன்பர் கருத்துரைக்காக வென வெளிவந்துள்ளன. கலைக் களஞ்சியம் சிறந்த முறையில் வெளிவருவதில் கருத்துக் கொண்ட நாம் இத்தகைய பணியில் ஆர்வங் கொண்டுள்ள அன்பர்கள் சிலர் கருத்து வேண்டினோம். இது வரையில் எம் விருப்பத்திற் கிணங்கிய அன்பர் இருவர் குறிப்புக்களை இம் மலரில் வெளியிட்டிருக்கின்றோம். தமிழ்ப் பற்று மிகுந்த ஏனைய அன்பரது கருத்துக்களையும் கலைக் களஞ்சியச் செய லாளர்களுக்குத் தெரிவித்து மகிழ்வோம். கூடுமானால் கலைக் களஞ்சியம் எழுதப் பெற வேண்டிய முறையைத் தொகுத்துச் சில மாதிரி ஏடுகள் தரவும் எண்ணியுள்ளோம்.



தமிழ் நாடு தமிழருக்கே.

தமிழர்களே,

இத் தமிழ்த் திருநாளிலே தமிழ்க் கொடியினை நிலை நாட்ட உறுதி கொள்ளுங்கள். தமிழ்க் கொடி வில்லும் புலியும் மீனுங் கொண்டது. விலங்குகளையும் வேற்று நாட்டினரையும் வெல்லும் வலிமையைக் காட்டுவது வில். புவியிலே பாயும் புலிகளையுங் கொல்லுந் திறமையைப் புலப்படுத்துவது புலி. கடலிலே கப்ப லோட்டி மேல் நாடுகளுக்குங் கீழ் நாடுகளுக்குஞ் சென்று வணிகத்தில் சிறந்து விளங்கியதை விளக்குவது மீன். இம் மூன்றையுங் கொண்ட கொடியை இமயமலையில் பொறித்துவைத்தனர் நந் தமிழ் மூவேந்தர். 'தென்றமிழ் நன்னாட்டுச் செழுவிற் கயற்புலி மண்டலை யேற்றி' மகிழ்ந்தனர் நம் முன்னோர். சிலப்பதிகாரம் சான்று பகரும். முதல் இராசராசனது ஆனைமங்கலச் செப்பேட்டிலும், சோழர் கால நாணயங்களிலும் இம் மூன்றும் பொறிக்கப்பெற் றுள்ளமையி லிருந்தும் இவ் வுண்மையை அறியலாம். (Vide Epigraphia Indica, Vol. XXII & Tamilian Antiquary, Vol. II, 2, Page 18, Fig. 115)

'வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅ துருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்' என்றும்

'தென்குமரி வடபெருங்கல்
குணகுடகட லாவெல்லை' என்றும்

புறநானூற்றிலும், மதுரைக்காஞ்சியிலும் வந்துள்ள சொற் றொடர்கள், பண்டு நந் தமிழ் நாட்டின் வட வெல்லை இமய மலை

என்பதை அறிவிக்கின்றன. சிந்து வெளியில் மொகஞ்சதாரோ முதலிய இடங்களில் தோண்டி யெடுக்கப்பெற்ற புதை பொருள்கள் நந் தமிழர் நாகரிகம் வட நாட்டில் பரவியிருந்ததை அறிவுறுத்து கின்றன. பின்னர் எல்லை குறுகி வட வேங்கடமே வட வெல்லை யாயிற்று. இன்று வேங்கடம், நெல்லூர், சென்னை முதலிய தமிழகத் தைச் சேர்ந்த இடங்களை வடவர் கைப்பற்ற முனைந்துள்ளனர். எல்லைப் பிரிவினையைப் பற்றி ஆராய வந்த 'தார் குழுவினர்' முடிவு தமிழருக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது.

திரு. நேரு அவர்களும், திரு படேல் அவர்களும், திரு. பட்டாபி சீத்தாராமையா அவர்களும் எல்லைப் பிரிவினைபற்றிக் காய்தல் உவத்த லின்றி நேர்மையாக முடிவு காணுமாறு நம் உரிமைகளை எடுத்துக்கூறி நிலைநாட்டுவோமாக.

இந் நன் னாளில் நிகழும் பொங்கல் விழாவில் மகிழ்ச்சியொடு தமிழர்கள் தங்களைத் தமிழர்க ளென்றும், தமிழே உயர் தனிச் செம் மொழி யென்றும், வில்லும் புலியும் மீனுங் கொண்ட கொடியே தமிழ்க் கொடி யென்றும் உணர்வார்களாக.

நம் நாடும், மக்களும், மொழியும், மாண்புற்று வாழ்க.

வாழ்க தமிழ். வாழ்க தமிழ்க் கொடி. வாழ்க தமிழர். வாழ்க தமிழர் நாடு.

திருவள்ளுவ ராண்டு }
தூகூாஅ௰, தை, க. }

அ. சண்முகசுந்தரம்,
தமிழர் கழகம், தஞ்சை.



வாய்மையும் பொய்ம்மையும்.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

வாழ்வியல் முறை, அகத்திற் றோன்றும் நினைவு, உணர்வு. துணிவுகளின் தொகுதி யாதலான், நல்வாழ்க்கைப் பேற்றிற்கு, ஊன்றுகோ லொப்ப விளங்கும் அன்பும், அறனும், உயிருடன் கூடி உலவுங்காலே, மெய் வாழ்வின் நுண்மையினை நெறி கோலிக் காட்டுவது கண்கூடு. அகத்தி லுறும் உணர்வு நினைவுகளுக் கியையச் சொல்லும் செயலும் உருவாகின்றதினுன், அவை உளத்தின் உண்மைக் குறிப்பினைப் புலப்படுத்தும். உளத்திற் றோன்றுவதாய உண்மை எஞ்ஞான்றும் நெஞ்சினைப் பற்றியே நிற்கும் இதனாற்றான் மூதறிஞ ராய தமிழ்த் தொல்லோர் தமிழ் நெறியினைப் பொற்புடைய தாக்க நெஞ்சிற்கு முதன்மை கொடுத்தே, உண்மையினை அதன்பால் தொடர் புடையதாக வைத்தார். நெஞ்சு கரி யாதலே,

கண்டவ ரில்லென வுலகத்து ளுணராதார்
தங்காது தகைவின்றித் தாஞ்செய்யும் வினைகளுள்
நெஞ்சறிந்த கொடியவை மறைப்பவு மறையாவாம்
நெஞ்சத்திற் குறுகிய கரியில்லை யாகலின்

என்ற நெய்தற் கலியான் கண்டு தெளிக. 'தன்னெஞ் சறிவது பொய்யற்க' என்பது தேவர்தம் திப்பிய மொழி யாகும். எனவே, நெஞ் சறிய உண்மையோ டியைந்த வாழ்வு மெய் வாழ் வாகும். இஃ தொன்றே மக்க ளுயிரின் ஆயும் மன நிலையினையும் உயர்நிலையினையும் ஒட்டிய தாகும். ஆயு மறி விலா ஏனைய உயிர்கள் யாவும் தம் மியற்கை இயல்புகளைக் கரவாது, உண்மை பட ஒழுகி வாழ்வதாகத் தோன்றினும், அவை யாவும் உயர் நிலை எய்தியவை யாகமாட்டா வென்பது கருதற் பாலது.

உளத்தின் குறிப்பினைக் காட்டும் உண்மை, உளத்தி லெழுந்து, வாய் மூலம் செவிக்குப் புலனுகும் வழி, வாய்மை யாகும்; மற்றும் அஃதே வாயா லன்றி மற்றப் பொறிகளின் மூலம் மெய்யில் புலப்படும் வழி மெய்ம்மை யாகும். எனவே, உண்மை,

வாய்மை, மெய்ம்மை என்பன ஒருபொருட் கிளவி யாயினும், ஒன்ருகா, அவை ஒவ்வொன்றும் தனித்தனி யியங்கிப், பின்தொடர்புடையதாய் விளங்குவது துணியப்படும். உளத்திற்கும் வாய்க்கும் கெழுதகைமையோ டெழுந்த நட்புரிமை உண்டு. உள்ளத் தூய்மையினின்று வாய்மை மலர்ந்து, அன்பு மணம் வீசுதலான், வாய்மை யாவது வாயின் அணிகல மாகும். உள்ளுணர்வுகள் மெய்யில் புலப்பட்டு விளங்குங் காலை, மெய்யின் தன்மை அறியப்படும். மெய்ப்படத் தோன்றும் உள்ளுணர்வு புறத்தார்க்குப் புலப்படுவதினுன் மெய்ப்பா டென்ருர், அறிவா னுன்ற பண்டைத் தமிழ்ச் சான்ருேர். புறத்துக் கண்ட தோர் பொருள் காரண மாக நெஞ்சின்கண் தோன்றும் விகாரத்தின் விளை வாகிய இம் மெய்ப்பாடு காதலை யொட்டிச் செய்யு ளுறுப்புகளுள் பெரும் பான்மையாகச் சிறப் பிட முற்றது தொல்காப்பியத்தில் காண லாகும். உள்ளுணர்வுகள் செவ்விய முறையில் ஒலியின் வாயிலான் விளங்கப் பேச்சு உதவுகின்றதினுன், அப் பேச்சின் வழி மக்களின் மன நிலை அறியப்படவே, மனத்தின் ஒலிபரப்பியே வா யென்பது நன்கு விளங்கும். எனவே, வாய்மை பேசி மகிழும் மெய் யின்பத் திருவினை யுடையார் மெய்வாழ்க்கைத் திருவாள ராய்த் திகழ்வ ரென்பது பெறப்படும்.

உள உணர்ச்சிக் கேற்ப இயற்கைப் பொருள்கள் மாறித் தோன்றியும், வேறுபட்டும் விளங்குதலால் புறப் பொருள்களைப் பற்றிய உண்மைகள் பலவகைத் திறத்தன. எண்ணிறந்த இத் தகைய உண்மைகள் யாவும் அறிவு வகையாற் புகுத்துவது இயலாமை கருதிச் சங்கத்துத் தமிழ்ச் சான்ருேர், சுவை மலிந்த பாடல்களில், பருப் பொருள்களையும், கருப் பொருள்களையும், உரிப் பொருள்களையும், உளத்தி லெழும் சில வுணர்ச்சிகளுக் கிட மாக்கி, இயற்கையை மக்களினின்றும் வேருக்காது, அவ் வுணர்ச்சி வகையான் உண்மையின் இயல்பினையும் வலியினையும ஊட்டுவா ராயினர். இயற்கையைப் பற்றிய உண்மைகள் அறிந்து கொண்ட வழி, அவ் வுண்மைகளைப் பயன்படுத்தும் முறை புல னுகு மாதலான், அம் முறையில் படிந்துநிற்போர் உண்மை யோ டியைந்த பெரு வாழ் வுடைய ராவ ரென்பது திண்ணம். என்னெனின், புறத்தே விரிந்த அறிவெல்லாம் அகத்தே செல் வுழி அஃது ஆங்கே உறைந்து வலியுறுதலான், அகத்தி லெழும்

உணர்வு நினைவுகளுக் கியைய சொல், செயல் முதலியன தெற லும் ஆற்றலும் வயங்க, அவை என்றும் ஒரு படித்தா யுளதாய், உண்மைக் குறிப்பினைக் காட்டும். இதனுன் தூய உணர்வும், அகத்தைப் புற மாகவும், புறத்தை அக மாகவும் நோக்கும் நல் லறிவு பெருகும். உளத்திற் பதிந்ததை மறைத்து, உளத்திற் ரேன்றுவதற்கும் புறத்தி லிருப்பவற்றிற்கும் வேற்றுமை காண, உள் ளொன்று வைத்துப் புறம் பொன்று திரிவுபடுத்தும் முர ணுன ஒழுக்கம் ஒருவரது வாழ்வினைக் கேடுறச் செய்வதோ டமையாது, ஏமாற்றத்தினை விளைவித்து, அவரது சிற் றுணர் வினையும் குற் றறிவினையும் புலப்படுத்தும். எனவே, உள்ளும் வெளியும் ஒத்திருக்கும் உள்ள ஒற்றுமையை உணர்ந்து, உண்மை பட ஒழுகலே வாழ்வினை மாண்புறுத்து மென்பது பெற்ரும்.

அகத்தின் பான்மையினைப் புறத்தில் வயங்கச் செய்வது உளத்திற்கும் வாய்க்கும் உள்ள கேண்மையே. இக் கேண்மை விளியாது நிற்கும் பழி பாவத் தொடர் பின்மையால் திகழ்வதி ஞன், இது மெய் யுணர்வு சான்ற பெருமக்களாற் புகழப்படுவ தற் குரிய தவ ஞானப் பெருநிலை யொழுக்கத்தோ டொத்த இயல் பிற்று. இதனுற்ருன் பொய்யாச் செந் நாவிஞற் பாடும் தவத் திரு வுடைய ராய திருவள்ளுவர் வாய்மையினது இலக்கணத் தைக் கிளக்குங் காலை,

> வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
> தீமை யிலாத சொலல்.

என அருளி, வாய்மை அறத்திற்கே சிறப்பின் உரிய தாயிற் றென்பதைப் புலப்படுத்த 'எனப்படுவது' என்ற சொற்றொட ரையும் பெய்துவைத்த அருமை உள்ளுந்தோறும் இறும்பூது பயப்பது உணர ற்பாற்று. மற்றும் வாய்மை தீ தகற்றி, அது பழகினுரை நன்னெறியின்கண் நிலைநிறுத்துதலைக் கண்டும், உல கியல் வழக்கில் தெரிந்தும், அதன் அருள் நிலை விழுப்பமும் சிறப் புடைமையும் விளங்கத் தோன்ற வள்ளுவப் பெரியார்,

> யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
> வாய்மையி னல்ல பிற.

என மெய்ம்மை தேற்றும் நுட்ப மிக உறுதிப்பாட்டுடன் கூறியது உள்ளுந்தோறும் ஆராமை பயப்ப தாகும். எனவே, தன துள்ளம்

அறிந்ததனைப் பொய்யாமல் பிறி தோ ருயிர்க்குத் தீங்கு ஒரு சிறிதும் தருத லின் றிப் புரை தீர்ந்த நன்மை பயக்கும் மெய்ம்மை யுரையே 'மனத்தொடு வாய்மை மொழி' யென்பதூஉம், பொய்ம்மைபோல் முதற்கண் ஓரோவழி காணப்பட்டு, உண்மை யில் நலம் பயப்பது வாய்மை யென்பதூஉம் வள்ளுவரது சீரிய உள்ளம். கூர்ந்து சிறிது சிந்திக்கப் புகின், வாய்மையின் சிறப்பினை நவிலும் மெய்ந் நூல்களுக்கு மக்களது இயல்பைச் சீரிய தாக்கும் வன்மை யில்லை. ஆனால், பெரு வாழ்விற்கு மாசு தீர்த்துக் கோலி நிறுவி வாய்மையின் வழிபட்டு நின்ற தெய்வப் புலமைத் திருவள்ளுவர் தாமாகவே அறிந் துணர்ந்த வாய்மை பற்றிய உண்மை மூலம், அவர் தம்மை அடி யொற்றி வாழ விரும்புபவர், வாய்மையை வளர்ப்பதற்கு வழி காண இயலும். இது பற்றியே வள்ளுவர், வாய்மைக்கு உயிர்ப் பூட்டவும், அது மக்கள் மாட்டும் நெறிபட்டு வழங்கவும், யாமெய்யாக் கண்ட வற்று ளில்லை, வாய்மையினும் சிறந்தனவாகச் சொல்லப்பட்ட பிற அறங்கள் என் றருள்வா ராயினர்.

சொல்லும், செயலும், உணர்வும் ஒன் றி நிகழுமா று செய்ய வல்ல தூய வாய்மை யாது என்றூர்க்கு, வள்ளுவர், மனம் புண் பட, 'தீமை யிலாத சொலல்' வாய்மை யென நன்குணர வைத்தார். இதனுன் தீமை யுள்ளன, நிகழ்ந்தன வாயினும், சொல்லப் படுவன வல்ல வென்பது புல னுயிற்று. எனவே, நன்மை யுள்ளது, நிகழா தாயினும், சொல்லப்படுமோ என்று ஆயின், நன்மை தரும் பொய் யுரையும் சொல்லப்படு மென்பது

> பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
> நன்மை பயக்கு மெனின்.

என்ற மற்றோர் அரு மா மணிக் குறளால் விளங்கும். இதனுன் புரை தீர்ந்த நன்மை பயக்கும் பொய்ம்மைச் சொற்களும் மெய்ம்மைச் சொற்களே யாம் என அறிந்த ஞான்று, பொய்யாமை எனும் சீரிய அறம் நலம் பயக்கும் வழி பொய் மெய்யாயும், தீங்கு பயக்கும் வழி மெய் பொய்யாயும் திரிவு படு மியல் புடைய தாயிற்று. உண்மையான் ஆயுங்கால், வாய்மை உளத்தின் குறிப்பினைக் காட்டும் உண்மையுடன் தொடர் புடையதே யன்றி, வாய்ப் பேச்சுடன் ஒன்ருகாது. மனதில் உதித் தெழும் எண்ணங்களை வெளியிடுவதற்காகவே வா யென்னும்

உறுப்பு பயன்படுகிறது. அதனுன் நகையும், பகையும், நன்மையும், தீமையும், சில வமயம் விளைவதினுன், மங்கல மரபினதாய்த் துலங்கி, மங்கல மொழி யுரைத்தல் வாய் மொழிக் கழகு. இதனுன் தீமை யிலாத சொலல் என்ற விழுமிய உள்ளப் பாங்கில் மக்களின் மன மூன்றப்படவே, மனம் தூய்மை எய்தும். தூய்மையால் மனந் தெளிய, நெஞ்சத் திட்பச் செம்மையான், வாக்கு இயல்பாகவே தெளிவுறும். தூய்மை மனதில் அழியாத தன்மையும் நன்மையு மாகிய மெய்ம்மை எழி லுற மலரவே, நன்மை பயக்கும் பொய்ம்மையையும் வாய்மையாய்க் காணும் மன வமைதியும், கேடும், செல்வமும், சீர்த்தியும், நிந்தையும் வேறற நோக்கும் பான்மையும் நிலையுறும். இந் நிலையே பேராவியற்கை தரு மென்பர் தன்னலமற்ற தெய்வத் தன்மை வாய்ந்தார். இரு வினை ஒப்புத் தன்மை உண்டாய வழி, கேடு ஒரு குறைவாகத் தோன்ருது. இவ் விழுமிய உள்ளப் பழக்கத்தில் மக்கள் வீறுடன் திகழ, வாய்மையின் இலக்கணத்தை வள்ளுவர் மேலை இரு குறள் மணிகளான் வரையறுத்துத் தெளியவைத்த மென்மை உளமார அறிந்துணரற்பாற்று.

வாய்மை யறம் திரிவுபடு மியல்புடைய தாயினும், அவ் வியல்பு ஆரவார பான்மையவாய் பய னிலாது நிற்கும் நீர்மையது. அவ் வற வினை வழுவாது நிற்க, உள்ளத்தோடு வாய்மை மொழிதலை வற்புறுத்துவா ராயினர் வள்ளுவர். அகம் வேறு புறம் வேருகச் செய்யும் அறவினை உள்ளத்தைப் பற்ருவிடின், அகத்துக்கண் ணுள்ளதாய மாசு அகலாது. மன மாய செப்புக் கலத்தை வாய்மை யாய ஒழுக்கங்களால் தேய்த்துக் கொண்டே யிராம விருந்தால், அதில் திண்ணமாய்க் களிம் பேறு மென்பது கற்றறிந்தோ ருணர்வர். உள்ளத்தில் மாசு சேரவிட்டால், உய்யும் வழி அறியாமையான் வியா விழுமம் விளையும். அதனுன் மெய்ப் பொரு ளுணர்ச்சியும் கிட்டாது. இது குறித்தன்றே அகத்தொடு பட்ட வாய்மையினின்று வழுவியவழி வரும் தீமையினை வள்ளுவர், 'தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின், றன்னெஞ்சே தன்னைச் சுடும்.' என்ற வெண் குறட் பாவால் விளக்கினுர். உள்ளத்தாற் பொய்யா தொழுகலான் வரும் விளக்கத்தினுன், வருந்தாமே புகழும் ஏனைய அறப் பயனும் கைகூடு மென்பது,

பொய்யாமை யன்ன புகழில்லை பொய்யாமை
யெல்லா வறமுந் தரும்.

என்ற குறளால் தெளியப்படும். இக் குறட் பொருளொடு,

பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

என வள்ளுவர் புகன்றிருப்பதையும் கருதி, 'ஒருவன் பொய் யாமையையே பொய்யாமையையே செய்ய வல்லானாயின் அவன் பிற வறங்களைச் செய்யாமையே செய்யாமையே நன்று' எனப் பிறர் மதம் கண்டிக்கும் பரிமேலழகரது பொருளுரையினையும் குறியாக்கொண்டு, வாய்மை யுடையார் பிற வற மியற்ற திருத்தல் நன்றென வள்ளுவர் விளம்பினாரென்று பொருள் கோடல் குற்றறி வுடைமை யாகும். மனத்தோடு பட்ட வாய்மை வழுவா வழி, ஏனைய அறங்கள் நய னுடைய தாகி நிலைபெற்றுப் பயன்படு மென்பது வள்ளுவர் கொண்ட நோக்கத்திற்குப் பொருந்து மென நுனித்துணர்ந்து கொள்க. இத் தகைய வாறு வியன்செய் வாய்மை யறம் வானினும் விரிந்ததினால், உளத்திற் கேற்ப முத் தூய்மை வாழ்க்கை வனப்புறும் வண்ணம் பொய்யா தொழுகும் தெய்வப் பெரியார் என்றும் உலகத்தா ருளத்தினு ளெல்லாம் உளரா யிருந்து வணக்கத்திற் குரிய ராவர்.

அற விளக்கத்திற்கு வாய்மை யொன்றே சுடராகும். அச் சுடரான் உள்ளத்தினுள் ஞான மெய்ந் நிலை பொலிவுறும். வாய்மை, அறநெறி நின்று வாழ்வை வள மாக்கும். மற்றும், அறிவு, அழகு, உண்மை, செம்மை என்ற இன்பக் கனிகளை நல்கும். உள்ளத் துணர்வு உண்மையினை விளக்கு மாதலான், வாய்மையான் மனத் தூய்மை எளிதில் வாய்க்கும்; மனம் மெய்ப் பொருளில் ஒன்றுபட்டு அமைதி நிலையினை யுறும். மனத்தின் தூய்மையால் வாய்மை காணப்படு மாதல் பற்றி, வாழ்வைக் கெடுக்கும் மனத் தழுக்குக ளாகிய அறியாமை, அச்சம், ஆசை, ஆணவம், அழுக்காறு, பொய்ம்மை முதலானவைகளை மன நிலத் திற் படர விடாது அகற்ற வேண்டியது இன்றி யமையாதது. வாய்மை அகத் தழுக்கை நீக்கு மாதலான், அது புறத் தூய்மை செய்யும் புனல் போன்றது. உயி ரோவியத்தை, அழுக்கு நீக்கி, ஒளி பெறப் பொலிவிக்கச் செய்வது வாய்மை யாகும். 'புறந்

தூய்மை நீரா னமையு மகந்தூய்மை, வாய்மையாற் காணப் படும்.' என்பது திருவள்ளுவர்.

உளத்தி னுள்ளே யுணர்வெனுந் தீர்த்தநீர்
மெள்ளக் குடைந்து நின்றாடார் வினைகெடப்
பள்ளமு மேடும் பறந்து திரிவரிக்
கள்ள மனமுடைக் காசினி யோரே.

என்பர் திருமந்திர நூலுடையார். புறத்தே தாழ்வடமும், அகத்தே கரவடமும் இருப்பின், உள்ளத்தில் நின்று யாவற்றை யும் இயக்கிக் காணும் இறைவன் வெளிப்படா ரென்பது, சத்துவ குண வித்தக அறிஞர் கண்டுணர்ந்த அனுபவ உண்மை. அகத் தூய்மை யின்றி இயற்றப்படும் எச் செயலும் இறைவனுக்கு உவப்பன வாகா. மெய் யொழுக்கத்தா லாய அகத் தூய்மை யின்றி இயற்றிய தக்க யாகம் கேடு நல்கியதும், சிவ கருமம் சிதைத்த தன் தாதைதன் தா ளிரண்டையும் சேதித்தவரது அகத் தூய்மையான செயலும் நன்றாகியதும், சிந்தித்து அகத்துட் கொள்வது அறிவுடையார் கடப்பா டாகும்.

உடலத்தைப் பேணுத லொன்றானே, மக்களது வாழ்க்கை முற்றுப்பெறுவ தில்லை. மன மாசகன்று அமைதி நிலையுறுவது வாழ்வின் மாண் பயனாகும். அவ்வா றிலாது, மன, மொழி, மெய் யால் அற மல் வழியி லேகுவது பொய்ம்மை பெருக்கும் வழி யாகும், புன் னடை, நன் னெறியினைக் காண்பிக்கா தாதலான். நிலைத்த நன்மையினை, பாரினுள், உள்ளத்தோடு கூடாத பொய் மொழியினைக் கொண்டு என்றும் பெற இயலாது. பொய்ம்மை யாவது, வேழ முண்ட விளங் கனி போன்று, உள்ளீ டில் லாமை யாகும். உள்ளம் அறிவ தொன்றை மறைத்து, உள்ளத்தி லுதிக் கும் எண்ணத்திற்கும், மெய்யால் செய்யும் செய்கைக்கு மிடையி லேற்படும் முரணான ஒழுக்கம் பொய்ம்மையில் படிந்த தாகும். எனவே, தன் னெஞ் சறிய வாழ்தல் வேண்டிப் பொய் சொல்லு தல் மனத்தோடு வாய்மை மொழியாமை யாகு மென்பதூஉம், வாய்மை வழுவி யொழுகல் பொய் கூறி ஒழுகுத லென்பதூஉம் பெற்றாம். எதிரே இனியவாக வுரைத்துப், புறத்தே இகழ்ந் துரைத்தவழி, அவ் விரு உரைகளும் ஒன்றை யொன்று தம்முள் மாறுபட்டுப் பொய் படுவதினான், வள்ளுவர், 'புறனழீஇப்

பொய்த்து நகை' தீதெனக் கருதி, அது கடியப் படுவதென்றும், பொய்படு உரைகளை வழங்குபவர் வஞ்சக ரென்றும், அவ் வஞ்ச கர்களை அஞ்சவேண்டுமென்றும்,

முகத்தி னினிய நகாஅ வகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும்.

என்ற குறட் பாவால் நன்கு தெளிய வைத்தார். களவில் ஒழுகும் அவ் வஞ்சக மனத்தான் ஒழுக்கத்தை உலகம் அறியாது போயினும், அவன துளம் அதனை அறியு மாதலானும், அவ் வொழுக்க உள்ள நிலை அவன் கருதிய பயனைத் தராது, அவனது பொய்ம்மையினைக் கண்டு நகாநிற்கும். நகுதலோ டமையாது அந் நெஞ்சே அவனைத் துன்புறுத்து மாதலான், உய்தல் அவனுக்கு அரி தாகு மென்க. இத் தகையவாறு உலகை வஞ்சித்து வாழ்பவரைப் போன்று வன்கண்மை யுடையோர் வேறில்லை யாதலான், அவர் தம் உறவு முரணுன பயனை விளைவிக்கும் தகைமைத்து. வாய்மை வழுவாமையில் சிறிது இழுக்கு நேரிடினும் அதனை நீக்கக் கழு வாயு முளது. பொய்ம்மை விழையா வுள்ளம் ஒரோவழி மயங்கி விழையு மாயினும், அதனுன் மனமார வருந்தி, வழுவா வகையினை ஆய்ந்து, தன் தகவுடைமை யுணர்ந்து, வாய்மையினை வளர்ப்பது அறிவுடைமை யாகும். உள்ளதை இல்ல தாகவும், இல்லதை உள்ள தாகவும், விளையாட்டுக்கேனும் புகல்வது சில வமயம் கூற்றினுங் கொடிய தாகவும் நேர்வ தியல்பு. மற்றும் வேங்கை மரத்திற் பூக் கொய்வார், அதன் கிளை தாழ்ந்து நிற்கப் 'புலி, புலி' யென்று ஆரவாரம் தோன்றக் கூவ, வல் வில் லுடைக் கானவர், ஆவினைக் கொள்ளும் வயப் புலி யாகு மெனக் கடிதே செல்ல, அது விளையாட்டாக நாளும் வளரப், பின்னர் ஒரு நாள் வினையாய் முடிந்த கதையினை யொக்கு மென்க. இதனுன் கறை யுறு மொரு பொய் கூறு வார்க்கு விளையும் கேடு அறியப் படுவதினுன், பொய்ம்மையே பல இடர்களுக்கு இருப்பிடமா மென்க. இது குறித்தன்றே அறிவுடைச் சான்றோர் அரும் பெற லுலகம் அமிழ்தொடு பெறினும் நெஞ் சறியப் பொய் சொல்லத் துணியார்.

அறியாமை, அச்சம், அவா, ஆணவம், அழுக்கா று முதலிய வற்ருல் மனம் தெளியாது சிதறிப் பொய்ப்பதினுல், வாய் வெற் றுரையான் பொய்க்கிறது. மனத்தினைத் தீய வழியில் செலுத்து தலே அறியாமை யாகும். அறியாமையா னெய்தும் மயக்கம் ஆணவ மயக்க மென்க. அறியாமை யாவது இரு ளாகும். இருளால் விளைவது பிறவித் துன்பம் தரும் தீவினை. கலங்கிய அறிவினுல் தீவினை இயற்றி வர, அறிவினை நல் வழியில் தொழிற் படுத்தும் மெய்ப் பொரு ளுணர்ச்சி கிட்டாது போகும். எனவே,

நுண் ணுணர் வின்மை வறுமையே யாகும். இதனுன் அறிவிலார் பொருட் செல்வச் சிறப் புடையரேனும், மற் றென்னுடைய ரேனும், அவைகளை உண்மையில் இலராவர், எனவே, மாய மாய பொய்ம்மையை அழித்திட வல்லது அறி வென்னும் படை யாகு மென்பதூஉம், தீமையினை நீக்கி நன்றின்பா லுய்ப்பது அறி வுடைமை யென்பதூஉம் புல னும்.

பொய் தோய் மனத்தினை யுடையார் மாசுடை அறிவின் மூலம் தாமும் தெளியாது, இறக்கு மளவும் துயரத்தில் வாழ்ந்து, மிகை செய்யும் பகைவர்கள் செய்ய வொண்ணு இடர்ப்பாடு பல தாமேயும் தமக்கு ஆக்கிக்கொண்டு, உயிரின் ஊதியத்தை இழப்பர். அறிவைப் பண் படுத்திப் பழகும் வகையில் பயிலாத வர், அறிவியல் நூல்களிற் கூறப்படும உள் பொருளை உணர மாட்டாது, வாழ்க்கையில் பொய்ம்மையே பெருக்கித், தன் கால எல்லையைச் சுருக்கி வாழும் புன்மைய ராவர். இவர்தம் மெய் யுரையும் பொய்படும். மற்றும் எவ்வாற்ருனும் தனது பொய்ம்மையினை எவருக்கும் தோன்ருமற் காத்துப், பிறன் கேடு கருதும் ஒழுக்கம், முதற்கண் ஆண்மையினைப் போக்கி, அச்ச மதனை விளைவித்துக், கரந்த பகைமையினையும் பெருக்கி, இறுதி யில் பழி பாவத்தில் இறுத்தும். இஃதோ டமையாது, பொய்ம்மை யொழுக்கம், உள்ளத்தை அழுக்காற்றில் செல விடுத்து, அவா வென்னும் துன்பக் கடலில் தப்பாது வீழ்த்தும். எனவே, மன, மொழி, மெய் மூன் றி லு ம் செம்மை காக்கும் அறத்திற்கு ஆகாதவை, பொய்ம்மை, அழுக்காறு, அவா, அச்சம், ஆணவம் என்பதூஉம், செய்யாது ஒழியத் தக்கது தீவினையும், பொய்ம் மையு மென்பதூஉம் பெற்ரும்.

இம்மை நலனழிக்கு மெச்சங் குறைபடுத்தும்
அம்மை யருநரகத் தாழ்விக்கும்—உம்மை
யறந்தேயுஞ் செய்ய அலர்மகளு நீங்கும்
மறந்தேயும் பொய்யொழுகு வாய்.

என்ற தமிழர் கொண்ட அரும் பொருட்பா வழி பொய்யர் பெறும் பேறு தெளியப்படும். பழி பாவங்க ளனைத்தும் பொய்ம்மை யுள்ள விடத்தில் கூடிக் குலாவிக் குடி கொண் டிருப் பதினுன், பொய்யர்தம் வாழ்வு இறைவனது திருவருட் கயலதா யிருக்கும் பான்மைத்து. உண்மையின்கண் உறைந்து நிற்கும் இறைவனைக் காணும் காட்சியினை மறைக்கும் புன்மையினையே, பொய்ம்மை தன் னகத்தே கொண்டுள்ளது. எனவே, பொய்யிலா மெய்யர் அறிவில் இறைவன் பொலிவதினுன், தமிழ்க் குடி முழு தாண்டு, தமிழர்தம் வாழ்வின் வழி முதல்வ ராய இறைவனை

மணிவாசகப் பெருந்தகை 'பொய்தீர் மெய்யானே', 'மெய்யர் மெய்யனே', என மன மலர்ந்து விளித்தது ஊன்றி யுன்னற் பாலது. ஆகவே, வியன் ஞாலம் பெறுவ தாயினும், பொய்யோ டிடை மிடைந்த சொல் உரைத்தற் பால தன் றென்பது புலனும்.

இத் துணையுங் கூறிய வாற்றால், துன்ப வினைகள் சார்ந்து விளைதற் கிடமா யுள்ள உலக வாழ்வினில் துன்பங்கள் இல வா தற்குச் சிறப்பும் செல்வமு மளிக்கும் உள்ளத் துண்மையும், உரை யகத்து வாய்மையும், உடலகத்து மெய்ம்மையுமே காக்கப் படுவன வென்பதூஉம், பழிப்பிற் கேது வாய பாவத்தைத் தரும் பொய்ம் மையே கடியப்படுவ தென்பதூஉம் உணரப் பெற்றும். அதா அன்று, இவ் வுலகின்கண் ணெய்தலாம் இன்பமும், மனத்தொடு பட்ட வாய்மையால் வரு மென்பதூஉம், அவ் வாய்மை யிடத்தே யுடையது அற மென்பதுஉம், வாய்மைக்கு மாறுபட்டு வஞ்ச முடைத்தாதல் பொய்ம்மை யென்பதூஉம், பொருள் நூல் வகுத்த குற்றங்களுள் ஒன் று பொய்ம்மை யென்பதும், வாய் மை நெறி நின்றார் வையகத்தே நலக் குரியராய் வயங்கி நீடு வாழ்வ ரென்பதூஉம், பொய்ம்மை நெறி நின்ற முறுகிய உணர் விலா மடவோர் எரி வாய் நிரயத்துள் வீழ்வா ரென்ப தூஉம், வாய்மை யுடையார் தெளிந்த அறிவினை யுடையா ரென்ப தூஉம், பொய்ம்மை யுடையார் கலங்கிய அறிவினை உடையா ரென்பதூஉம், உறுதி பயக்கும் வாய்மை வழுவாமையே உயர் பெரும் வாழ்க்கை யாகு மென்பதும் அறியப் பெற்றும். மற்றும் வாழ்வில் இற லீனும் பொய்ம்மையினை அஞ்சித் தவிர்த்தல் வேண்டு மென்பதூஉம், விற லீனும் வாய்மையினை அறிந்து செய்தல் வேண்டு மென்பதூஉம், எல்லா அறங்கட்கும் அடிப் படை யான அறம் வாய்மை யானதான், வாய்மை யின்றி இயற்றும் அறங்கள் இழிதக வுடைய வென்பதும், வாய்மை ஏனை அறங்களை நிலைநிறுத்து மென்பதூஉம், மன, மொழி, மெய்யில் வளரும் வாய்மையினை, கலப் பாலைத் துளி மோர் கெடுப்பது போன்று, பொய்ம்மை கெடுக்கு மாதலான், மக்கள் பொய்ம்மையைச் சாராது, மிக விழிப்பாய் ஒழுகல் வேண்டு மென்பதூஉம், வாய்மையால் எளிதே பெற லாகும் பெரும் பயனைக் கைவிட்டு, அரிதிற் பெறக் கிடக்கும் சிறு பயனைப் பொய் யினில் விழுந்து பல புன்மைகள் புரியும் வாயிலாகப் பெற அவாவுதல் கனி யிருப்பக் காய் கவர்ந்தற் றாகு மென்பது துணி பாயிற் றென்பதூஉம் கண்டு தெளியற் பாற்று.

பொருந்துமா?*

வித்துவான் M. குஞ்சிதபாத தேசிகர், தமிழாசிரியர், நன்னிலம்.

மக்கள் பேசும்போதே பழமொழிகள் பலவற்றை உபயோகிப்பர். அவற்றுள் 'கெட்டும் பட்டணம் சேர்', 'பட்டிக் காட்டானுக்குப் பட்டணம் பிடிபடுமா?' என்பவையும் காதில் விழுந்திருக்கலாம்.

பட்டணத்துப் பிள்ளையார் என்ற தொடரி லுள்ள பட்டணம் என்ற சொல்லையும் நோக்குமிடத்துப், பெரிய நகரங்களையே பட்டணம் என்ற சொல் குறிக்கின்றது என்பது யாவரும் அறிந்ததே.

'காவிரிப்பூம் பட்டினம், பட்டினப்பாலை' என்று சங்க இலக்கியங்களில் பதிப்பிக்கப் பெற்று வந்திருப்பனவற்றைப் படித்தோர் 'பட்டணம்' என்று வழங்குதல் பிழை யாகும், பட்டினம் என்றே வழங்கவேண்டும் எனப் பகர்வர். பிறரைத் திருத்தவும் முற்படுவார்.

மேற் கூறிய திருத்தத்தை ஆதாரமாகக் கொண்டு, சில திங்களுக்கு முன் நகர சபையார் 'பட்டினம்' என்று திருத்தியதாகச் செய்தித் தாளிலே படித்ததும் நினை விருக்கலாம்.

மேற் கூறிய மொழிகள் இரண்டையும் மேற்கோள் களுடன் ஆராயப் புகுந்த இடத்தில், இரண்டு மொழிகளும் தனித்தனிப் பொருளுடையன என்பது பெறப்படும். 'பட்டணம்' என்ற சொல்லில் ஓரெழுத்து மாத்திரம் பிழையாக மாறி வழங்குகிறது என்றும்; பட்டினம் என்ற மொழி சரியானதுதான், பொருள் மாத்திரம் இக்காலத்தார் கொண்டது போல் அல்ல என்றும் வெளிப்படையாக விளங்குகின்றன.

---

* உரிமை எழுதுவோரதே.

திருத்தமான ஆராய்ச்சியை எடுத்துக் கொண்டால், சிறந்த பதிப்புக்களையும் திருத்தவேண்டிய நிலையை உண்டு பண்ணும்.

முற்போக்கையே தழுவின், சிறந்த உண்மை யாராய்ச் சிக்கு இடந் தர வேண்டிய நிலை பயனின்மையாய் முடியும். இவ் விரண்டு மில்லாமல், வேறு திருத்தங் கூறினல், மேற் கோளுடன் கூற வேண்டு மென்னுங் கொள்கையை மறந்து விடுவதற்கும் இல்லை யல்லவா!

சூடாமணி நிகண்டு, 5ஆவது இடப்பெயர்த் தொகுதி யில் 37ஆவது செய்யுள்

'பலபல தீவிற்பகர்வ பட்டன மென்றுமே' என்றும், 39 ஆவது செய்யுளில் பட்டினமே நெய்தல்' என்றும், கூறி யுள்ள காரணங்களால், பல தீவுக ளாகிய பிற நாடுகளில் உண்டாய பொருள்கள் வந்து இறங்கி விற்கும் துறைமுகம் உள்ள பெரிய நகரங்களுக்குப் 'பட்டனம்' என்றும், கடற் கரைக் கருகி லுள்ள சிற்றூர்களுக்குப் 'பட்டினம், என்றும் வழங்கி வந்துள்ள முறைமையைத் தெரிவித் திருத்தலால் உணர லாகும்.

உ-ம். நாகப்பட்டனம், சென்னப்பட்டனம்

திருமலைராயன் பட்டினம், அதிராம் பட்டினம்

மேலும், பல்கலைக் கழகப் பேராசிரியர்களால் தயாரித்து வெளி வந்திருக்கும் லெக்சிகன் பக்கம் 2423. பட்டனம் (Sea port town) என்றுளதாலும், நெய்த னிலச் சிற்றூர்களி லுள பரதவர்களுக்குப் பட்டினவர் என்ற பெயர் வழங்கி வரு கின்றமையாலும் மேற் கூறிய பொரு ளுண்மை இன்றும் நிலை பெறுதலை அறிக.

உள நூல்

வித்துவான் திரு. M. குஞ்சிதபாத தேசிகர்,
தமிழாசிரியர், உயர்நிலைப் பள்ளி, நன்னிலம்.

(முற்றொடர்ச்சி: துணர் 24, மலர் 7, பக்கம் 196.)

மறப்பும் அதனை யகற்றும் வழியும்.

மனம் பல பொருள்களின் குணங்களையும் வடிவங்களையும் பதிவு செய்திருக்கிறது. எல்லாப் பொருளும் (விஷயமும்) ஒன்று கூடி எப்போதும் நினைவிலேயே இருக்க முடியாது.

மனத்திற் பதிந்தனவற்றில் சில மறதியாக இருக்கும், மறப்பு என்பது முன் நினைத்திருந்த செய்தி மனத்தை விட்டு அகன்றதாகக் கருதுகின்றோம். அவ்வா றிருப்பின் மனம் ஒரே நிலையிலிருந்து எண்ணிய பின் வெளிப்படும் பொருளாக இருக்கின்றது. மனத்தை விட்டு அகல்வதாக இருப்பின் பின்னர் வெளிப்பட இடமுண்டா? ஆகவே. முன்னர் நினைத்த செய்தி மறப்பாக இருக்கின்ற தென்றால் மனத்தை விட்டு அகல வில்லை. ஞாபகம் (நினைவு) அக் காலத்தில் வெளி வரவில்லை என்பதே யாம். ஆகவே, மறப்பு இல்லையானால் நினைவு இல்லை. நினைவு எப்போதும் இருக்குமானால் மறப்பு இல்லை. கணவன் மனைவியைப் பார்த்து உன்னை நினைத்தேன் என்று சொன்னவுடன் தலைவி, இது வரையில் என்னை மறந்து பின் இப்போது தான் நினைத்திருக்கின்றீர் என்று சொல்லிப் புல்லாத வளாய்ப் புலந்தாள் என்று பொருள்படுகின்ற,

> 'உள்ளினே னென்றேன்மற் றென்மறந் தீரென்றென்னைப்
> புல்லாள் புலத்தக் கனள்.'

இக் குறளால் திருவள்ளுவர் நினைப்பு மறப்பு என்பதற்குப் பொருள் விளக்கஞ் செய்துள்ளார்.

இம் மறப்பை உயிர்க் குணங்களுள் ஒன்று என்று நன்னூலார் கூறுகின்றனர்.

> ' அறிவு அருள் ஆசை யச்சம் மானம்
> ... ...
> வென்றி பொச்சாப்பு ஊக்கம் மற மதம்
> மறவி யினைய உடல்கொள் உயிர்க் குணம்.'

மனிதனுக்கு மறப்பு இல்லையானால், மனத்தில் எப்போதும் எல்லாச் செய்தியும் நினைவிற்கு வந்து குழப்பம் உண்டாவதோடு, புதிய பொருளில் மனம் ஊக்கத்துடன் செல்லத் தடைப்படும். ஆகையால், மறப்பும் நமக்குத் தெரியாமலே ஒரு நன்மையை உண்டாக்கிக் கொண்டு இருக்கிறது.

ஒன்றை விரும்பி நினைக்கும்போது மனம் மற்றைய செய்திகளை மறந்திருக்கும். ஆசை யாகிய குற்றம் ஏறுவதால் விரும்பிய பொருள் மாத்திரம் நினைவிற்கு வரும். எல்லாம் எப்போதும் நினைவி லிருக்கு மாயின், சிற் றறிவினன் மனிதன் என்று நூல்கள் நுவல இட மிராது.

நினைப்பும் மறப்பும் அற்ற நிலை ஒன்று உள்ளது. அந்நிலை கடவுட் டன்மை யுணரும் பெரியார்க்கே உண்டு என்று ஞான நூல்கள் நவில்கின்றன.

நம்முட னிருந்து நமக்கு நன்மை செய்யும் என்று எண்ணிக் கொண்டிருக்கின்ற நம் மனம் உற்றவிடத்துச் சிற்சில வேளைகளில் உதவி செய்யாது (மறந்து) பெருமையைக் குறைத்தலால், 'மறப் பெனும் பகைவன் வாரிக் கொண்டனன்' என்று மறப்பைப் பகைவன் என்றும், நீண்ட நாள் வருந்தித் தேடிய செல்வத்தைக் காட்டிலும் நிலைத்த செல்வ மாகிய உயர் கல்விப் பொருளை மறைத்தல் கருதியும், அம் மறைத்தலானது ஆறாத் துயரம் உண்டாக்கும் என்பதைக் கருதி வாரிக் கொண்டனன் என்று தன் பொருளைக் கொள்ளைக்குப் பறி கொடுத்தவர் போலவும்,

இலக்கணக்கொத்து ஆசிரியர் கூறி இருக்கின்றார். மறப்பால் அவையிலிடத்து உதவாக் கல்வி, 'கடும் பகல், ஏதிலான்பாற் கண்ட இல்லினும் பொல்லாது' என்றார் குமரகுருபரர். மறப்பு மிகச் சிலருக்கு இயற்கையாக அதிகமாக இருக்கும். பலருக்கும் அதிக விருப்பமாக வுள்ள காலத்திலும், அதிக வெறுப்பா யுள்ள காலத்திலும், உடல் நிலை சரியாக இல்லாத காலத்திலும், வேறொன்றை வேகமாகச் செய்து முடிக்க வேண்டுமென்று இருக்கின்ற காலத்திலும், வேலை செய்து மனம், உடல் களைப் பேற்பட்ட காலத்தும் மிகுதியாக இருக்கும்.

1. குறிப்பு எழுதி நினைவிற்குக் கொண்டு வருதல்
2. மன நிலையை ஒழுங்காக வைத்துக் கொள்ளுதல்.
3. உடல் நிலையைச் சரியாகப் பார்த்துக் கொள்ளுதல்.
4. அடிக்கடி எண்ணி எண்ணி நினைவிற்குக் கொண்டு வருதல்.
5. திறமை யுள்ளாரோடு பழக்கம் ஏற்படுத்திக் கொள்ளல்.

ஆகிய இவைகளை மேற்கொண்டு நடப்பின், நாளடைவில் மறதி குறைந்து நன்மை யுண்டாக்கும் என்பதில் ஐயம் இல்லை.

—

இசைத் தமிழ்ப் பாடல்*

திரு. சங்கீதம் ப. சுந்தரேசன்,
தேவாரத், திருப்புகழ் இசை யாசிரியர், அரசர் கல்லூரி, திருவையாறு.

திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் துதி.

பண்—அம்சத்தொனி. ஆதி—தாளம்.

முதலடி

ஆனை முகவன் அடிமலர் தனையே
அனு தினம் நினைவாய் நெஞ்சே —ஆனை முகவன்

துணையடி

ஆனைக்கும் ஆடிடும் அண்ணலார் மகிழும்
ஐங்கரனே என்றும் ஐயைமகனே என்றும் —ஆனை முகவன்

கடையடி

பொல்லாப் பிள்ளையா ரெனப் பொதுப் பெயரும் எடுத்தார்
புண்ணிய நாரையூரில் புகழ் பெறவே யடுத்தார்
நல்லார் நம்பியாண்டார் நம்பிக்கருள் கொடுத்தார்
ஞானிலம் மகிழத்தமிழ் மறைகளையும் விடுத்தார் —ஆனை முகவன்

* இது சென்ற மலரில் சுவரப் படுத்தி வெளியிடப்பட்டது.

பரத சாத்திரம்

(முற்றொடர்ச்சி : துணர் 23, மலர் 10, பக்கம் 300)

கஅ-ஆவது. மிருகசிரக்கை.

மிருக சிரக்கை யனுமிகை மத்திமை
பொருமங் குஷ்டம் பொருந்தக் கூட்டித்
தற்சனி கனிஷ்டர் தமைப்பின் னீட்டுதல்
உச்சித மாவிதன் தொழிலினை யுரைக்கின்
கலையொரு காளை கார்மா முகநேர்
நிலையறு முடலி னியாசஞ் செய்தல்
உத்த நவதா னியத்தை யுகந்தே
அத்தந் தன்னால் அள்ளிட லாகும்
ஓமத்திற் சருவை யுகந்தே யிடுதல்
ஆமெனக் குறுமுனி யறைந்தனர் மாதோ.

(இ-ள்.) மிருக சிரக்கை யென்பது மோதிரவிரல், நடுவிரல், பெருவிரல்களைப் பொருந்தக் கூட்டிச் சுட்டு விரல் சுண்டு விரல்களை நீட்டுதலாம். இதன் தொழில்—மான், ஆடு, எருது, எருமை இவைகளின் முகத்தைக் காட்டுதல், தேகத்தைத் தொட்டு நியாசஞ் செய்தல், நவதானிய மெடுத்தல், ஓமத்தில் அவிப்பாகங் கொடுத்தல் முதலியவாம் - எ - று. (௧அ)

ககூ-ஆவது. சிங்கநுகக்கை.

சிங்க நகக்கை செப்புங் காலை
அங்கையின் விரல்களை யகற்றி வளைத்தல்
நாடி யிதன்றொழில் நவிலுதுங் கேண்மோ
கோடங்கி நாடிக் குறிகூ றிடலாம்
உறுபுலி சிங்க வடிவினுக் குவமைபாம்
திறமிகு சிங்க முகத்தினை செப்புதல்
பங்கய மலரின் படிவங் காட்டல்

அங்கர் தன்னைக் கிள்ளுதல் சொறிதல்
என்றே பொதியத் திறையரு ளினரே.

(இ-ள்.) சிங்க நகக்கை யென்பது ஐந்து விரல் களையும் விரித்து மேனோக்க வளைத்தலாம். இதன் தொழில் குடுகுடுப்பைக்காரன் குறி சொல்லுதல், புலி யடி, சிங்க வடி, சிங்கமுகம், தாமரை மலர்களுக்கு உபமானங் காட்டல், தேகத்தைத் கிள்ளல், சொறிதல் முதலிய வாம் எ-று.

௨௰-ஆவது. கூர்மக்கை[1]

கூர்மக் கையைக் கூறுங் காலை
நேர்பெறப் பெருவிரல் நீட்டிப் பின்பு
மற்றைநால் விரலும் வளைத்துக்கீழ் நோக்கல்
சொற்ற கரத்தின் றொழிலினைத் தெரிக்கில்
செந்நெற் கதிர்க்குலை சேரக் காட்டுதல்
உன்னிய வாமை யுருவுக் கிவையாம்
கருதியே ஞெண்டு[2] தன்னைக் காட்டுதல்
வருகடி[3] பிடிக்கும் வகையைக் காட்டிடல்
என்றே பொருநை யியன்ற மலயக்
குன்றுறை குறுமுனி கூறின ரன்றே.

(இ-ள்.) கூர்மக்கை யென்பது, பெருவிரலை நீட்டி மற்றைய விரல்களை வளைத்துக் கீழ்நோக்கப் பிடித் தலாம். இதன் றொழில் செந்நெற் கதிர்க்குலை, ஆமை, நண்டு இவற்றின் உபமானங் காட்டல், பிசாசு முதலியன பிடிப்பதைக் காட்டல் முதலியவாம் - எ - று.

---

1. கூர்மம்—ஆமை. ஆமை யுருவுக் கியைய அமைந்தமை யின் கூர்மக்கை யெனும் பெயர்த் தாயிற்று.

2. ஞெண்டு—நண்டு.

3. கடி—பேய்.

உக—ஆவது. பூரணக்கை

பூரணக் கையே பொருவில்ஐ விரலும்
நேரதா விரித்து நிறுத்தி நீட்டுதல்
இவ்வகைக் கைத்தொழி லியல்புடன் விரிக்கின்
ஐவகைப் பொருளுக் கடையாளங் காட்டல்
எண்ணிய பஞ்சலிங் கத்துக் கிதுவரும்[1]
நண்ணிய வுடல நடுக்கத்திற் கிதுவாம்
செஞ்சொற் றுளஞ் சீருடன் காட்டல்
அஞ்சு நிலத்தை[2] யணிபெறக் காட்டல்
வாய்ந்த விலவிலை வளர்பனை யோலை
ஆய்ந்தவா மணக்கிலை யதுபோ லிலக்குமாம்
பெருத்திடு மலகைப்[3] பிடித்திடி னேட்டல்
எருத்தனைத் தட்டி யெடுப்பதி விதுவரும்
கூந்தல் சிகையைக் கோதிடற் கிதுவாம்
வேய்ந்ததா னியத்தை வெயிலி லுலர்த்திடல்
ஐந்தலை நாகப் படத்தினை காட்டிடல்
எந்தையே கையி லிலையொன் றுமென் றிடல்
நனைத்திடு சோமனை[4] நற்கையாற் றட்டுதல்
நனைத்தெண்ணெ யதனிற் றீவர்த்தி கொளுத்தல்
இரத மூறு மின்றமிழ் தன்னிற்
பாத முரைத்த குறுமுனி பகர்ந்தனர்.

(இ—ள்.) பூரணக்கை யென்பது—ஐந்து விரல்களை யும் விரித்து நேரே நீட்டுதலாம். இதன் றொழில் ஐந்து

---

1. பஞ்சலிங்கம்—நிலம், நீர், தீ, வளி, விசும்பு என்னும் ஐம்பெரும் பூதங்களில் இறைவனை வழிபடுதற் கமைந்த அருவுருவத் திருமேனிகள். திருவேகம்பம், திருவானைக்கா, திருவண்ணமலை, திருக்காளத்தி, திருத்தில்லை என்னும் திருப்பதிகளில் மேற் காட்டிய முறையே ஐம் பூதங்களின் வடிவில் சிவனை வழிபடுதல் இவண் கருதத் தகுவதாம்.
2. அஞ்சு நிலம்—குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்னும் ஐவகை நிலங்கள்.
3. அலகை—பேய். 4. சோமன்—ஆடை.

வகைப்பட்ட பொருள்களுக்கு உபமானங் காட்டல், பூமியாதி பஞ்சலிங்கங்களையும், தேக நடுக்கத்தையும், பஞ்ச தாளத்தையும், ஐந்து வித நிலங்களையும், இலவிலை, பனையோலை, ஆமணக்கிலை முதலியவைகளையுங் காட்டல், பேயோட்டல், வறட்டி தட்டல், கூந்தலையுஞ் சிகையையுங் கோதல், தானியத்தை யுலர்த்தல், ஐந்து தலை நாகங் காட்டல், என் கையில் ஒன்று மில்லை யென்று விரித்தல், சோமனைத் தோய்த்து மடித்துத் தட்டுதல், நிவர்த்தி காட்டல் முதலியவாம்—எ—று.

உஉ—ஆவது மென்னிலைக்கை[1]

மென்னிலை யங்குஷ்ட மேவி மடக்கி
முன்னுநால் விரலும் விரித்துமுன் னீட்டுதல்
பாங்குட னிதன்றொழில் பகரக் கேண்மதி
வேய்ங்குழ லூதிடு போதுநால் விரலாற்
பொன்னலைப் பொத்திடல் பொருவறு சுருதியில்
உள்ள பொருள்களை யுகந்தே யுரைத்தல்
எண்ணிய லக்க மீரிரண் டிற்கிதாம்
பண்ணியற் றமிழ்முனி பகர்ந்தன ரென்ப.

(இ—ள்.) மென்னிலைக்கை யென்பது பெருவிரலை மடக்கி மற்றைய விரல்களை விரித்து நீட்டுதலாம். இதன் தொழில் புல்லாங்குழ லூதும்போது பொள்ளலை விரலாற் பொத்துதல், வேதப்பொருள் நான்கினையுங்

---

1. இஃது அடியார்க்குநல்லார் காட்டிய மெய்ந்நிலை என்னும் கையின் இயல்பினை ஒருவாறு ஒத்துக் காணப்படுகிறது. மெய்ந்நிலையாவது — சிறுவிரலும், அணிவிரலும், நடுவிரலும், சுட்டுவிரலும், விட்டு நிமிரச் சுட்டு விரன்மேற் பெருவிரல் சேரவைப்பது.

'மெய்ந்நிலை யென்பது விளம்புங் காலைச், சிறுவிரல் அநாமிகை பேடொடு சுட்டிவை, யுறுத லின்றி நிமிரச் சுட்டின்மிசைப் பெருவிரல் சேரும் பெற்றித் தென்ப' சிலப்பதிகார உரை மேற்கோள்.

காட்டல், கான் கென்னு மிலக்கங் காட்டல் முதலிய வாம்-எ-று.

உ௩-ஆவது. முன்னதக்கை[1]

முன்னதக் கையின் முறையோ பதாகையில்
உன்னிய தற்சனி யொளிபெறப் பிரித்திடல்
இன்ன கையின் இயல்பினை யுரைக்கின்
மன்னர் முடிக்கு மழுமா னுக்கிதாம்
செந்நெற் கதிர்க்குலை சிகர கோபுரம்
முன்னிய முக்குண முப்புரத் திற்கிதாம்
மன்னிய விடபிங் கலைசுஷு முனைக்காம்
ஒப்புடன் கத்திரிக் குவமைகூ றிடுதலாச்
செப்பிய விருபான் மூன்று காங்களும்
அவ்வவற் றிற்கே யறைந்த முறைப்படி
செவ்விய தாகுஞ் செயல்புரிந் திடலென
அவ்விய மறுமுனி யறைந்தனர் மாதோ.

(இ-ள்.) முன்னதக் கை யென்பது—பதாகைக் கையில் சுட்டு விரலைப் பிரித்திடலாம். இதன் றொழில் அரசர் முடி, மழு, மான், செந்நெற் கதிர், கோபுரம், முக்குணம், திரிபுரம், இடகலை, பிங்கலை, சுஷுமுனை, கத்திரிக் கோல் இவற்றிற் குபமானங் காட்டல் முதலியவாம். மேலே தனித்தனி விரித்துக் கூறிய இருபத்து மூன்று

---

1. முன்னதக்கையுடன் சேர்ந்து ஒற்றைக்கை இருபத்து மூன்று என இந்நூல் கூறுகின்றது. பதாகை, திரி பதாகை, கத்தரிகை, தூபம், அராளம், இளம்பிறை, சுகதுண்டம், முட்டி, கடகம், சூசி, பதுமகோசிகம், காங்கூலம், கபித்தம், விற்பிடி, குடங்கை, அலாபத் திரம், பிரமரம், தாம்பிர சூடம், பிசாசம், முகுளம், பிண்டி, தெரிநிலை, மெய்ந்நிலை, உன்னம், மண்டலம், சதுரம், மான்றலை, சங்கு, வண்டு, இலதை, கபோதம், மகரமுகம், வலம்புரி என இணையா வினைக்கை யாகிய ஒற்றைக்கை முப்பத்து மூன்று வகையென்பர் அடி யார்க்கு நல்லார்.

கரங்களின் தொழிலறிந்து அபிநயஞ் செய்கவென்று மலய முனிவர் கூறினர். எ-று.

ஒற்றைக்கையில் ஆண்கை.[1]

சிகர முட்டி சிலீமுகஞ் சூசிகம்
தகைபெறு பதாகை சார்ந்த முகிழ்க்கை
மிருக சிரத்தொடு மெல்லிய வன்னவாய்
சாளைய மொன்பதுஞ் சாற்றிடு மாணே,

(இ-ள்.) சிகரம், முஷ்டி, சிலீமுகம், சூசிகம், பதாகை, முகிழ்க்கை, மிருகசிரம், அன்னவாய், சாளையம் என்னும் ஒன்பதும் ஆண் கை யாம். எ—று.

ஒற்றைக்கையிற் பெண்கை.[2]

திரிப தாகை கடகம் பிறைக்கை
திரிலிங்கம் பணிசிரஞ் செப்பிடு மான்றலை
கூர்மக் கரமே பெண்ணெனக் கூறுவர்.

(இ-ள்.) திரிபதாகை, கடகக்கை, பிறைக்கை, திரிலிங்கக்கை, சர்ப்பசிரக்கை, மான்றலைக்கை, கூர்மக்கை என்னும் ஏழும் பெண் கை யாம். எ-று.

---

1. முட்டி சிகர மலர்பதுமஞ் சந்தஞ்சம்
விட்ட சிலந்தி மிருசூசி—ஒட்டுஞ்
சதுரம் பதாகந் தருதிரிப தாகம்
அதிகமுறு மாண்கைநவ மாம்.

2. கடகஞ் சுகதுண்டங் காங்கூல மன்னும்
அடைவாம் பிறைக்கை யராளந்—தடமருவு
மன்னபக்கந் தாம்பிர சூடமொடு மான்றலையே
யின்னவெட்டும் பெண்ணாகும் மே.

ஒற்றைக்கையில் அலிக்கை.[1]

பூரண மென்னிலை புகலுங் கபித்தம்
ஏர்பெறு முன்னத மியல்பற்ம கோசம்
சந்தாங் கிசம்பஞ் சானன நகமுடன்
இந்த வேழு மியலலி யாமே.

(இ-ள்.) பூரணக்கை, மென்னிலைக்கை, கபித்தக்கை, முன்னதக்கை, பற்மகோசக்கை, சந்தாங்கிசக்கை, சிங்க நகக்கை யென்னும் ஏழும் அலிக்கை யாம். எ-று.

ஒற்றைக்கை முற்றிற்று.

---

1. சர்ப்பசிரம் வண்டு தனிமுகுளங் கத்தரிகை
விற்பனஞ்சேர் கோசங்க விதமுட—னற்புதமே
யாகு மலிக்கைக ளாறென் றுரைப்பரே
பாகனைய சொல்லாய் பரிந்து.

என வரும் இவை சூத்தானந்தப் பிரகாசத்தி லுள்ள வெண்பாக்க ளாகும். இவற்றிற்கும் இந் நூலி லுள்ள ஆண்கை, பெண்கை, அலிக்கை என்பனவற்றைக் குறிக்கும் பகுதிகளுக்கும் சிற்சில வேறுபாடுகள் உள்ளன. 'ஒற்றைக்கை, இரட்டைக்கை யென்னு மிவ் வகையோடும் ஆண்கை, பெண்கை, அலிக்கை, பொதுக்கை யென்னும் நான்கினையுங் கூட்டி ஆறென்பாரு முளர்.' என்னும் அடியார்க்குநல்லா ருரை இவண் கருதத் தகுவதாம்.

இரட்டைக்கை.[1]

இரட்டைக் கையி னியல்பை யுரைக்கின்
பொருட்டரு மஞ்சலி புஷ்பாஞ் சலியே
தாடனம் பதாகை தருசங் கற்பம்
நீடிய டோளம் நேர்மையுற் சங்கம்
உபசா ரக்கை யொன்றிய கருணையா
மபய வரத மாமக ரத்தொடு
கருடக் கையுடன் கவின்பெறு பாரதி
கருதிடு கலகக் கைசுப சோபனம்
மன்னிய முகிழ்க்கை மல்லயுத் தக்கை
சொன்னதோர் பதாகை சோத்திக முடனே
கத்திரி சோத்திகங் கருதுமீ ரொன்பது
முற்றிடு மிரட்டைக் கையின் றொகையே.

இரட்டைக் கையைத் தொகுத் துணர்த்துகின்றது.

(இ-ள்.) அஞ்சலி, புஷ்பாஞ்சலி, தாடனம், பதாகை, சங்கற்பம், டோளம், உற்சங்கம், உபசாரக்கை, அபயவரதம், மகரக்கை, கருடக்கை, பாரதிக்கை, கலகக்கை, சுபசோபனக்கை, பற்மமுகிழ்க்கை, மல்லயுத்தக்கை, பதாகை சோத்திகம், கத்திரி சோத்திகம் என்னும் பதினெட்டாம். எ-று.

---

1. இரட்டைக்கையினை இளங்கோவடிகள் பிணையல் என்ற சொல்லாற் குறிப்பிடுவர். பிணையல்-இணைதல் என்னும் பொருளில் இரட்டைக்கைக்குப் பெய ராயிற்று. இணைக்கை (இரட்டைக்கை) பதினைந்து வகைப்படு மென்பர் அடியார்க்குநல்லார். அவை யாவன :—அஞ்சலி, புட்பாஞ்சலி, பதுமாஞ்சலி, கபோதம், கற்கடகம், சுவத்திகம், கடகாவருத்தம், நிடதம், தோரம், உற்சங்கம், புட்பபுடம், மகரம், சயந்தம், அபயவத்தம், வருத்தமானம் என்பனவாம்.

க-ஆவது. அஞ்சலிக்கை.[1]

வந்தனை யஞ்சலி வகைதான் [2] பதாகை
தந்திரு கையுஞ் சாரப் பொருத்துதல்
இதன்றொழி லதனி னியல்பினை யுரைக்கின்
பதந்தரும் பரம பராபரத் தினுக்குச்
சிரமேற் பன்னிரண் டங்குலஞ் சேர்த்தல்
தாமுறு சதாசிவன் றனக்கு மிதுவாம்
உற்ற சென்னியி னுயர்தே வர்க்காம்
நெற்றி நடுவே நேர்குரு விற்காம்
வாய்க்கு நேரே வைத்திட விறைக்கும்
பாக்கிய பிதாவுக் காமெனப் பகருவர்
ஆகந் தன்னி லந்தணர் வணக்கம்
வாகுசேர் தாய்க்கு வயிற்றிற்கை வைத்தல்
பாதந் தன்னைப் பணியும் வகைதான்
போதக்கை நீட்டிக் கூட்டி வணக்குதல்
இதயந் தனினே ரெட்டங் குலமாம்
விதமுட னிதன்றன் விதமுரைத் திடினே
கெஞ்சுத லஞ்சுதல் கிளையை வணங்கல்
தஞ்ச மென்றே சபையைச் சுற்றுதல்
கருத்துடன் விபூதியைக் கையாற் குழைத்தல்
திருத்தமா முனிவர் செப்பின ரென்ப.

இரட்டைக் கையை விரித்துரைக்கின்றது.

(இ-ள்.) அஞ்சலியாவது முன் ஒற்றைக் கைக்குக் கூறிய பதாகை விதிப்படி இரண்டு கைகளின் அகங்கைகளை ஒன்றாகக் கூட்டுதலாம். இதன் தொழில், பராபரத்திற்குஞ் சதாசிவத்திற்கும் சிரசின்மேல் பன்னிரண்

---

1. அஞ்சலியாவது இரண்டு கையும் பதாகையாய் அகம் ஒன்றுவது.

2. இது இறைவனை மலர்தூவி வழிபடுதற் குரியதாதலின் வந்தனை அஞ்சலி என்றார்.

'அஞ்சலி யென்ப தறிவுறக் கிளப்பின், எஞ்ச லின்றி யிரு கையும் பதாகையாய், வந்தகம் பொருந்து மாட்சித் தென்றனர், அந்தமில் காட்சி யறிந்திசி னோரே' என்பது அஞ்சலிக்கையின் இலக்கண மாகும்.

டங்குலங் கரங்களை யுயர்த்தியும்[1], தேவர்களுக்கு சிரசிலும், ஆசிரியருக்கு நடு நெற்றியிலும், பிராமணருக்கு மார்பில் வைத்தும், அரசருக்கும், பிதாவுக்கும் வாய்க்கு நேர் வைத்தும், அன்னைக்கு வயிற்றினேர் வைத்தும், கையை நீட்டி நின்று வணங்குதலாம். கெஞ்சுதல், அஞ்சுதல், சுற்றத்தாரை வணங்கல், தஞ்ச மெனல், திரு நீறு குழைத்தல் முதலியவைகளில் வரும். எ—று.

உ-ஆவது, புஷ்பாஞ்சலிக்கை.[2]

புஷ்பாஞ் சலியே புகலிரு கரங்களின்
சர்ப்ப சிரத்தைத் தான்கூட் டிடுதல்
நற்கரச் செயலை நவிற்றுங் காலை
பொற்புறு வாழைப் பூவிணை காட்டல்
சங்கங் காட்டல் தர்ப்பணஞ் செய்தல்
அங்கையாற் பதார்த்த மள்ளி யிடுதல்
மன்ன ரிடத்தில் வாய்பொத்தி நிற்றல்
கன்னி மணத்திற் காப்புக் கட்டுதல்
மௌன பிச்சை வாங்கிப் புசித்தல்
சிவமுணர் குறுமுனி செப்பின ரன்றே.

(இ-ள்.) புஷ்பாஞ்சலி யென்பது-முற் கூறிய சர்ப்ப சிரக்கைகளைக் கூட்டலாம். இதன் றொழில், வாழைப் பூவுக் கிணை காட்டல், சங்கங் காட்டல், தர்ப்பணஞ் செய்தல், பதார்த்தங்களை யள்ளியிடல், அரசர்க்கு முன் வாய் பொத்தல், கன்னியருக்குக் காப்புக் கட்டல், மவுன பிச்சை வாங்கி யுண்ணல் முதலியவாம். எ-று.

---

1. சிவபெருமான் ஒருவர்க்கே தலையின் மேற் பன்னிரண்டங்குலம் உயர்த்துக் கைகூப்பி வணங்குதல் வேண்டும் என்பதும், ஏனைத் தேவர்களுக்குத் தலையின் மேற் கைகுவித்து வணங்குதல் வேண்டு மென்பதும் பரத நூல் செய்த முதலாசிரியரின் கொள்கையாகும்.

2. புஷ்பாஞ்சலியாவது—இரண்டு கையும் குடங்கையாய் வந்து ஒன்றுவது என்பர் அடியார்க்கு நல்லார். 'புட்பாஞ் சலியே பொருந்தவிரு குடங்கையும், கட்டி நிற்குங் காட்சிய தென்ப.' என்பது அவர் காட்டும் இலக்கணச் சூத்திர மாகும்.

திருக்குறள்
பொன்னுரைப் பகுதிகள்.

உரைகாரர்: கொக்குவில் திரு. வ. பொன்னையா, B.A. (Hons.), Ph.D.

(முற்றொடர்ச்சி: துணர் உச, மலர் சு, எ, பக்கம் 184.)

புலான் மறுத்தல்.

புலான் மறுத்தல் என்பது புலா லுண்டலை மறுத்தலாகிய அறம். துறவை மேற்கொண்டு நின்ற வீட்டு நெறி முயறல் விழைவார்க்கு அருளுடைமைச் சாதனமே அந் நெறியை அடைவித்தற்கு ஏது வாகுமென்று கூறிப் போந்தவர், ஈண்டு அவ் வருளுடைமைச் சாதனத்திற்கு இன்றியமையாத தாகிய புலான் மறுத்தற் சாதனங் கூறுகின்றார். இச் சாதனமும் பல் லுயி ரனைத்தையும் ஒக்கப் பார்க்குங் கருத்தாற் செய்யப்படுதல் பற்றிக் கட்டுக் கேதுவாகிய பசு நல்வினை தீவினைகள் போலாது செய்வார்க்குப் பய னளவில் ஞான நெறியாகிய தவத்தினைத் தலைப்படச் செய்யும் அருளுடைமைச் சாதனத்திற்குத் துணையாய் நின்று சிவப்புண்ணிய மாகு மன்றி அவரைப் பந்தித்தல் செய்யா தென்க.

1. உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ண துணர்வார்ப் பெறின்.

(இ-ள்.) உணர்வார்ப் பெறின் புலால் உண்ணாமை வேண்டும் — அருளுடைமைச் சாதனஞ் செய்வாரை இவ் வுலகம் பெறின், அவர் புலால் உண்ணாராக; (புலால்) பிறிதொன்றன் புண்ணது — அப் புலால் பிறிதோ ருயிரின் மன நோவின் கண் உள்ளது ஆகையான். எ-று.

உண்ணாமை வேண்டும் என்பது உண்ணாராக என்னும் பொருளில் நின்றது. அளபெடை செய்யு ளசை

சிதையாமைப் பொருட்டு. பிறிது அஃறிணை யொன்றன் பாற் பெயர். ஒன்று எண்ணுகு பெயர். புண்ணது ஏழாம் வேற்றுமைப் பொருண்மைக்கண் வந்த குறிப்புப் பெயர். பிறிதொன்று என்புழியும் புண்ணதுணர்வார் என்புழியும் உயிர்த்தொடர்க் குற்றிய லுகரங்கள் உயிர்முதன் மொழி வரக் கெட்டு நின்றன. உண்ணுமை வேண்டும் புலால் என்றும், புலால் பிறிதொன்றன் புண்ணது என்றும் இரு வழியுங் கூட்டுக. புலால் பிறிதொன்றன் புண்ணது என் புழிப், புலால் என்னும் எழுவாய் புண்ணது என்னும் பெயர்ப் பயனிலை கொண்டது. உணர்வார் என்றது அருளுடைமைச் சாதனஞ் செய்வாரை; அன்னுரின் அருமையை அறிவிப்பாராய் 'உணர்வார்ப் பெறின்' என்றுர். பெறின் என்னும் பயனிலைக் கேற்ப இவ் வுலகம் என்னும் எழுவாய் வருவித் துரைக்கப்பட்டது.

புலாலாவது பிறிதோ ருயிரை யலைத்து அதன் மன நோவின் கண் பெறப்படுவ தொன்ருகலான் வீடுபேறடைதல் நோக்கித் துறவு பூண்டு அருளுடைமைச் சாதனத்தின் நிற்பாராவார் தம் அருளுடைமைக்குப் பங்கம் வராவகைப் பிற வுயிர்கட்கு மன நோவை யுண்டாக்கும் புலா லுண்டலை யொழிவாராக வென்று கூறியவாருயிற்று. புலா லுண்டல் கொலைமையும், அக் கொலை பிற வுயிர்களுக்கு மன நோவையும் பயக்கு மென்க.

இக் குறளுக்குப் பரிமேலழகர், 'புலாலாவது பிறிதோருடம்பின் புண், அது தூய்தன்மை யறிவாரைப் பெறின், அதனை உண்ணு தொழியல் வேண்டும்' என்னும் உரையையும், 'அம்மெய்ம்மை யுணராமையின் அதனை யுண்கின்ருர் என்பதாம். பொருந்து மாற்ருலும் புலா லுண்டல் இழிந்த தென்பது இதனுற் கூறப்பட்டது' என்னும் உரைவிளக்கத்தையுந் தந்தனர்.

புலாலைப் புண் என்பது ஏற்றிச் சொல்லும் வழக்கின் பாற்படும். இதனை யறியாதார் பரிமேலழகியார் புலாலைப்

புண் என்ற வழக்குப்பற்றிப் புலா லுண்டலை இழிந்த தென்று கருதினமை நகைச் சுவை பயப்ப நின்ற தொன் றென்க.

இப் பாட்டு என் னுதலிற்றோ வெனின், அருளுடை மைச் சாதனஞ் செய்வாராவார் பிறவுயிர்கட்கு மன நோவை உண்டாக்கும் புலா லுண்டலை யொழிவாராக எ-து.

2. பொருளாட்சி போற்றாதார்க் கில்லை யருளாட்சி
யாங்கில்லை யூன்றின் பவர்க்கு.

(இ-ள்.) பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை-பொரு ளுடைமையை ஆளுதல் அதனைப் பேணாதார்க்கு இல்லை; ஆங்கு அருளாட்சி ஊன்றின்பவர்க்கு இல்லை — அது போல அருளுடைமையை ஆளுதல் அதனைப் பேணாதா ராகிய ஊன்றின்பவர்க்கு இல்லை. ஆகலான் அருளாட்சி விழைபவர் உண்ணாமை வேண்டும் புலால். எ-று.

ஈண்டு, பொருள், அருள் என்பன ஆகு பெயராய்ப் பொருளுடைமை அருளுடைமைகளைக் குறிக்கின்றன. போற்றாதார், தின்பவர் என்பன வினையாலணையும் பெயர் கள். ஈண்டு தகர வகர விடைநிலைகள் காலங் காட்டாது தன்மை யுணர்த்தி நின்றன. நான்க னுருபுகள் உபகாரப் பொருளன. ஆங்கு, உவம வுருபு, உவமை எடுத்துக் காட்டுவமை. உவமானத்திற் பொருளாட்சி யின்மையைப் பொருளுடைமையைப் பற்றிய செய்தியாற் கூறினமை யானே, பொருளில், அருளாட்சி யின்மையை அருளுடை மையைப் பற்றிய செய்தியாற் கூறுதல் கருதினர் என்று கொண்டு, 'அருளைப் பேணாதாராகிய' என்பது வருவித் துரைக்கப்பட்டது. பேணுதல் என்றது இடைவிடாது நினைத்தல் என்னும் பொருளது.

'புலாலாவது பிறிதொன்றன் மனநோவின்கண் பெறப்பட்டதென்பது ஒக்கும். அம் மனநோவைச் செய்து

அப் புலாலைப் பெற்றுன்மாட்டே அருளுடைமைப் பங்கம் வருமொழிய, அவன் தர யாம் அதனை யுண்போமாகில் அதனுல் யாதொரு பங்கமும் எம்மாட்டு வாராதே' என்று யாவராயினும் கூறுவாரேல், அவ்வாறு உண்பார்க்கும் அருளுடைமைப் பங்கம் வருமென்பது வற்புறுத்துவார் எடுத்துக்காட் டுவமையின்மேல் வைத்துக் கூறினு ரென்க.

தாம் செய்த பொருள் எத்துணைச் சிறிய தாயினும் அதனை இடைவிடாது நினைந்து நினைந்து இன்புறு தற் கேது வாகிய பற்றுள்ளத்தை ஊக்கி நின்ருராயின் அவரே தம் பொருளுடைமையைப் பேணுகின்ரு ரென் றும், அவர்க்கே பொருளாட்சி யுண் டென் றுங் கருதின ராய், அன்றி அப் பொருள் எத்துணைப் பெரிய தாயினும் அத்தகைய பற்றுள்ளத்தை மேம்படச் செய்யாது நின்ரு ராயின் அவர்தம் பொருளுடைமையைப் பேணினு ரல்ல ரென்றும் அவர்க்குப் பொருளாட்சி இன் றென்றுங் கூறு வார் 'பொருளாட்சி போற்ருதார்க் கில்லை' என்ரு ரென்க.

இனிப், பல் லுயி ரனைத்தையுந் தம் மக வென வொக்கப் பார்த்தற்கண் தம்மாட்டுச் சுரக்கும் அருள் எத்துணைச் சிறிய தாயினும் அதனை இடைவிடாது நினைந்து நினைந்து இன்புறுவதற் கேது வாகிய பற்றுள்ளத்தைத் தலைப்படச் செய்து நின்ரு ராயின், அவரே தம் அருளுடைமையைப் பேணி, அதனுனே அருளாட்சி யுள்ளா ராவ ரென்பதைக் கருத்திற் கொண்டு, அவ் வருள் எத்துணைப் பெரிய தாயி னும், அத் தகைய பற்றுள்ளத்தை ஊன் றின்னுங் காலத்து விளங்காது நிற்கவும், ஏனைய காலங்களில் விளங்கி நிற் கவுஞ் செய்தாராயின் அவர் தம் அருளுடைமையைப் பேணினு ரல்ல ரென்றும், அதனுனே அருளாட்சியிற் றீர்ந்தா ரென்றுங் கூறுவார் எடுத்துக்காட்டுவமையின் மேல் வைத்து 'அருளாட்சி யாங்கில்லை யூன் றின் பவர்க்கு' என்ரு ராயிற்று.

இக் குறளுக்குப் பரிமேலழகர் 'பொருளாற் பயன் கோடல் அதனைப் பாதுகாவாதார்க் கில்லை, அதுபோல அருளாற் பயன் கோடல் ஊன் றின்பவர்க் கில்லை' என்னும் உரையையும், 'பொருட் பய னிழத்தற்குக் காரணங் காவாமை போல, அருட் பய னிழத்தற்குக் ஊன் றினல் காரண மென்ப தாயிற்று' என்றும் உரை விளக்கத்தையுந் தந்தனர்.

ஆசை யானன்றிப் பரிசயத்தானே ஊன் றின்பார் மாட்டு அத் தின்கை தாக்காது மெலிதாய்க் கழிந்தொழிவ தன்றி, அவரது அருட் பய னுகிய ஞானத்தைக் கொல்லா தாகையான், அழகியா ருரை போலி யாய வாறு காண்க. இதற்கு ஊன் றின்றுங் கடைத்தேறிய கண்ணப்பர் முதலிய சீவன் முத்தராவார் தம் அருட் பய னுகிய ஞானத்தை இழவாமை சான்ருகும்.

இப் பாட்டு என் னுதலிற்றோ வெனின், அருளுடைமைச் சாதனஞ் செய்வாராவார் அருளாட்சியை வேண்டின் ஊனுண்டலை யொழிவாராக எ-து.

3. தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
 னெங்ஙன மாளு மருள்.

(இ-ள்.) தன்னூன் பெருக்கற்குத் தான் பிறிதூன் உண்பான்—தன்னுடம்பை வளர்க்கும் பொருட்டுத் தான் பிறிதோ ருயிரின் தசையைத் தின்பவன்; எங்ஙனம் அருள் ஆளும்— எவ்வாறு அருளுடைமை யாகிய செல்வத்தை ஆளுவான்; ஆளமாட்டான், ஆகலான் அச் செல்வத்தை ஆள விழைபவன் உண்ணுமை வேண்டும் புலால். எ-று.

தன்னூன், பிறிதூன் என்பன ஆரும் வேற்றுமைத் தொகைகள். ஈண்டு ஊன் என்பது தன்னூன் என்புழி உடம்பையும், பிறிதூன் என்புழித் தசையையுங் குறித்து நின்றது. பெருக்கற்கு என்பது எதிர்காலத்துக்கண்

காரியப் பொருளிற் குகர வீற்றுன் வந்த வினையெச்சம் அன்றி, நான்க னுருபு பெற்ற தொழிற்பெயரெனினு மமையும்; தொழிற்பெயராய்க் கொள்ளின், பிறிதூ னுண்டல் தன்னூனைப் பெருக்கற் பொருட் டாதலின், 'அதற்கு வினை யுடை மையின்' என்றற் ருெடக்கத்துச் சூத்திரத்து 'அதற் பொருட்டாதல்' என்னும் வாய்பாடு பற்றி வந்த தென்க, உண்பான் வினையாலணையும் பெயர். ஈண்டு, பகர விடை நிலை காலங்காட்டாது தன்மை யுணர்த்தி நின்றது. எங்ஙன மாளு மருள் என்பது ஆள மாட்டான் என்பது பட நின்ற இகழ்ச்சிக் குறிப்பு.

முன்னை வெண்பாவிற் கூறிய வதனை ஈண்டு ஒருவன் ஒருவாறு உடம்பட்டும் ஒருவாறு மறுப்பானுய், 'நீ சொல்வது ஒக்கும்; அருளுடைமையைப் பேணுதா னுகிய வூன் றின்பவனுக்கு அருளாட்சி இன் றென்பது. யான் ஒருவன் உயிர்கட் கோர் தீங்கும் நினையேன். யாதானு மோர் காரணத்தான் ஒ ருயிர்தானும் என் முன்னிலையில் துன்புறு தலைக்கண்டே னுயின், கண்ட வக்கணமே அவ் வுயிர்க் குற்ற விடரை நீக்க முயல்வேன். இதனுனே யான் அருளுடைமை யைப் பேணுகின்றவ னுவேன். ஆயினும், என் சாதனஞ் சித்தி யடையும்வரை என் னுயிர் உடலில் இருக்க வேண்டு மென்ற கருத்தானே அவ் வுடலை அழிய விடாது வளர்த்தற் பொருட்டு வூ னுண்கின்றேன். அது பற்றி எங்ஙனம் அருளாளேன்' என்பானேல், அவனுக்கு உத்தரமாக இக் குறள் எழுந்த தென்க.

சாத்தியந் தலைப்படுதற்குத் தன் னுடம்பை அழிய விடாது வளர்க்க வேண்டு மென்பது உண்மையே யாயி னும், ஒருயிரையும் அதனுடம்பி னின்றும் நீக்கா வியல்பிற் ருகிய தாவர வர்க்க வுண்டியானுந் தன் னுடம்பை வளர்க்கலா மென்பது கிடப்ப, அவ்வாறு செய்யாது, நிலை யில தாகிய தன் னுடம்பை ஒரு பொருளெனக் கருதி, அதனை வளர்த்தற் பொருட்டுப் பிறிதோர் விலங்கின்

உடம்பை நீக்குத லாகிய கொடுமைக் கேது வாகும் அருளி லிக்கு அருளாட்சி வரா தென்று கூறியவா றுயிற்று.

இக் குறளுக்குப் பரிமேலழகர், 'தன் னுடம்பை வீக்கு தற் பொருட்டுத் தான் பிறிதோ ருயிரின் உடம்பைத் தின்பவன் எவ் வகையான் நடத்தும் அருளினை' என்னும் உரையைத் தந்தனர்.

ஈண்டு பிறிதோ ருயிரின் உடம்பைத் தின்பவன் என்று கூறுதற்கண் பிறிதோர் விலங்கின் தசையைத் தின்பவன் என்னும் பொருளையே கருதின ராயினும், 'எங்ஙன மாளு மருள்' என்பதற்கு எவ் வகையான் அருளுடைமைச் சாதனத்தை ஆளுவான் என்று பொரு ளுரையாமையானே, அழகியா ருரை நல் லுரை யன் றென்க

இப் பாட்டு என்னுதலிற்றோ வெனின்: அருளுடை மைச் சாதனஞ் செய்வா ராவார் தம் சாதனஞ் செய்தற்குத் துணை புரியும் உடம்பை நிலை நிறுத்தற் பொருட்டுத் தானும் ஊ னுண்டா ராயின், அஃது அருளாட்சியைக் கெடுக்கு மாகலான், அன்னார் ஊ னுண்ணாராக. (எ-து.)

4\. படை கொண்டார் நெஞ்சம்போ னன்றூக்கா தொன்ற
னுடல்சுவை யுண்டார் மனம்.

(இ-ள்.) படைகொண்டார் நெஞ்சம் போல் – தம் பகை தீர்தல் கருதியுங் கொலைக் கருவியைக் கையிற் கொண்டவர் மனமானது கோற லாகிய கொடுமையை நோக்குவ தல்லது அப் பகை தீர்த லாகிய நன்மை பயக்கும் அற்புச் செயலை நோக்காத வாறு போல; ஒன்றன் உடல் சுவை யுண்டார் மனம் நன்று ஊக்காது– அருளாட்சி கருதியும் பிறிதோர் விலங்கின் தசையி னின்றுஞ் சுவையை அனுபவித்தவர் மனமானது ஊன்

சுவைத்த லாகிய கொடுமையை நோக்குவ தல்லது அருளாட்சி யாகிய நன்மை பயக்கும் அருட் செயலை நோக்காது. ஆகலான் அருளாட்சி விழைவா ராவார் உண்ணுமை வேண்டும் புலால். எ-று.

கொண்டார், உண்டார் என்பன வினையாலணையும் பெயர்கள். படை கொண்டார் என்றும் இரண்டாம் வேற்றுமைத் தொகை ஒட்டி ஒரு சொல்லாய் நின்று பின்னர் நெஞ்சம் என்பதனோடு தொக்கு ஆறும் வேற்று மைத் தொகையாய் நின்றது. நன்று-குறிப்பு வினையா லணையும் பெயர். ஒன்று எண் ணுகுபெயர். உண்டார் என்பது அனுபவித்தார் என்னும் பொருளது. உண்டார் மனம் என்பது ஆறும் வேற்றுமைத் தொகை. உடல் என்பதன் பின் ஐந்த னுருபையும், சுவை யென்பதன் பின் இரண்ட னுருபையும் விரித் துரைக்க. அன்றி, இரண்டி டத்தும் இரண்ட னுருபையே விரித்துரைப்பினு மமையு மென்க. உடலைக் குணி யென்றுஞ், சுவையை அதன் குண மென்றுங் கொள்ளக் கிடக்கின்றமையானுங், குணங்களே சமுதாயத்தா னோக்கிற் குணியாயுந், தனித்தனி நோக்கிற் குணங்களாயுங் கிடக்கின்றமையானும், உடலை யுண்டா ராகிய அருளுடைமைச் சாதனஞ் செய்வா ராவார் அதன் குண மாகிய சுவையையும் உண்டா ராவார். ஆயின், தம் சாதனத்தை முடிவு போக்கத் துணை செய்யும் உடம்பை ஊன் கொண்டு வளர்க்கு மதனில் தம் மனத்தைச் செலுத்த, அம் மனம் அதனை விட்டுச் சுவையைச் சென்று பற்று மென்று கருதி உடல் சுவை யுண்டார் மனம் என்பதற்கு உடலினின்றுஞ் சுவையை யுண்டார் மனம் என்று உடலை நீக்கப்படு பொருளாயுஞ், சுவையை அடையப்படு பொருளாயும் பொரு ளுரைக்கப்பட்டது. ஈண்டு நீக்க மென்பது உண்டாரது கருத்து நீக்கம். அன்றி, உடலைச் சுவையை யுண்டார் மனம் என்று, உடலைக் கருத்தின்றிச் செய்யப்படுஞ் சிறப்பில் செயப்படு பொருளாயுஞ், சுவை யைக் கருத்திற் செய்யப்படுஞ் செயப்படு பொருளாயும்

உரைப்பினு மமையு மென்க. ஊ னுண்டு உடம்பை யழிய விடாமையிற் சென்ற மனம், அக் கருத்திற் குறைந்து கொலையிற் சென்று பற்றி மூலநோக் காகிய அருளாட்சியை யழிக்கு மென்ப தாயிற்று.

முன்னே வெண்பாவிற் கூறியதை ஒருவாறு உடம்பட்டா னொருவன், 'அருளுடைமைச் சாதனஞ் செய்தற்குத் துணை புரிந்து நிற்கும் உடம்பை நிலைநிறுத்தற் பொருட்டும் ஊன் றின்னல் அருளாட்சி தரா தென்பது ஊன் றின்னுஞ் சிந்தை தின்பார்மாட்டு உளவாயி னன்றே உண்மை யாகும். 'யானொருவன் அச் சிந்தை யின்றி ஊன் உண்டல் செய்கின்றேன். அதனால் எங்ஙனம் அருளாளேன்?' என்பானேல், அவனை வழிப்படுத்தற் பொருட்டு இக் குறளைத் தந்தா ரென்க.

யாதானு மொரு காரணத்தான் தம்மைப் பகைத்து நின்றா னொருவன் பன்முறை தம்மேல் நலியவரின், அப் பகை தீர்கல் கருதி நின்றா ராவார் அவன்மாட்டு அன்பு செய்து அவன் பகையை நீக்குதல் ஒழிந்து, கொலைக் கருவியைக் கையிற் கொண்டு அவ னுயிரை உடம்பினின்றும் பிரித்த லாகிய கொடுமையைச் செய்து நிற்க, அவர் மனம் அப் பகை தீர்த லாகிய நன்மை பயக்கும் அற்பச் செயலில் நில்லாது, இவன் இன்னது செய்தானே. அதனானே யான் இன்னவாறுயினேனே என்னும் பல வகையான நினைவுகளை யுளவாக்கிக் கொலை நோக்கொடு பொருந்திப் பகை தீர்த லின்றிக் கிடக்கும். அதுபோல, அருளுடைமைச் சாதனஞ் செய்வா ராவார் அருளாட்சி பெறக் கருதித் தம் சாதனஞ் செய்தற்குத் துணை நிற்கும் உடம்பை யழிய விடாது நிறுத்தலே நோக்க மெனக் கூறி, ஊனைக் கையிற் கொண்டு அது இன் சுவை யின்றிய தாகலான் பல காயங்களை அதன்கட் பெய்து, அவற்றான் அதனை இனிய தாக்கி உண்டா ராயின், அவர் மனம் அருளாட்சி யாகிய நன்மை பயக்கும் அருளுடைமைச் சாதனத்திலும், அச் சாதனஞ்

செய்தற்கு உதவும் உடலை நிலைநிறுத்துதலினும் அமை யாது, இவ் வூன் இன்ன சுவைத்து; அவ்வூன் அன்ன சுவைத்து என்னும் நினைவுகளை உள வாக்கி, ஊனுண் டலில் உட்பட்டு, எடுத்துக் கொண்ட சாதனத்தின் நீங்கி, அதனானே அருளாட்சியு மின்றிக் கிடக்கு மென்று கூறி யவா றுயிற்று. அஃதாவது, ஊன்கண் சிந்தை யின்றிய மனத்தினராய், ஊன்றினல் என்பது அருளுடைமைச் சாதனஞ் செய்வார்க்கு ஏலாததோர் செய்தி யாகலான் அன்னார் அருளாட்சி வேண்டின் புலா லுண்ணாமை வேண்டு மென்றவாறு.

கண்ணப்பர் ஊன் றின்றும் அருளாட்சி பெற்றா ரெனின், அவர் முற் பிறப்புக்களில் தாம் செய்த சாதனங் காரணமாகவே அருளாட்சி பெற்றா ரென்றும், அது பெறுமுன் அப் பிறப்பிற் செய்த ஊன் றின்கை முன்னைப் பிறப்புக்களில் அவர் செய்த குறையே யேதுவாக ஊழான் தரப்பட்ட வேட்டுவர் குலத் தொழி லாத லொழிய, இச்சை வயத்தான் நிகழ்ந்த தொன் றன் றாகலான், அதனா லாய பாவம் அருளாட்சி பெற்று, இறைபணி நின்ற அவர் மாட்டுத் தீக்கைப் பேற்றினால் எரி சேர்ந்த வித்துப்போற் கெட்டுப் போன தொழிய, அருளாட்சிக் கேடு பயந்த தன் றென்றும், அத் தீக்கை பெற்ற பின் அவர் செய்த ஊன் றின்கை பரிசயத்தானே யன்றிக் கருத்தொடு பட்ட செய லன் றாகலான் பந்தித்தல் செய்த தன் றென்றும், இதனாலாய பாவமும் நுகர்ச்சி வயத்தான் மெலிதாய்க் கழிந் தொழிந்த தன்றி, மேலைக்கு வித்தாமாறு நின்ற தன் றென்றும், அது அருளாட்சிக் கேடு பயந்த தன் றென்றுங் கூறுக.

இக் குறளுக்குப் பரிமேலழகர், 'கொலைக் கருவியைத் தங் கையிற் கொண்டவர் மனம் அதனாற் செய்யுங் கொலையை நோக்குவ தல்லது அருளை நோக்காத வாறு போலப், பிறிதோ ருயிரி னுடலைச் சுவைபட வுண்டவர்

மனம் அவ் வூனையே நோக்குவ தல்லது, அருளை நோக்காது.' என்னும் உரையையும், 'சுவைபட வுண்டல் காயங்களான் இனிய சுவைத் தாக்கி யுண்டல். இதனால் ஊன் றின்றார் மனம் தீங்கு நினைத்தல் உவம வளவையாற் சாதித்து, மேலது வலியுறுத்தப்பட்டது 'என்னும் உரை விளக்கத்தையுந் தந்தனர்.

ஈண்டு ஞான நூற் பொருளை அற நூற் பொருளொடு சார்த்தி உவமையின் மேல் வைத்துக் கூறிய தறியாது, பொருளில் உடல் சுவை யுண்டார் மனம் அருளை நோக்கா தென்பதற் கேற்ப உவமானத்தில் படை கொண்டார் மனம் அன்பை நோக்கா தென்று கூறுவ தொழிந்து, அருளை நோக்கா தென்றே பொரு ளுரைத்தமையானும், நன்று என்பதற்கு எதிர்மறை உவமானத்திற் கொலை யென்று கொண்டவர் பொருளில் ஊன் சுவைத்தல் என்று கூறாது, ஊன் என்று கூறினமையானும், உடல் சுவை யுண்டார் மனம் என்பதற்கு உடலினின்றுஞ் சுவையை அனுபவித்தார் மன மென்றாவது, உடலைச் சுவையை அனுபவித்தார் மன மென்றாவது பொரு ளுரையாது, உடலைச் சுவைபட உண்டவர் மனம் என ஒரு சொல் வருவித் துரைத்தமையானும், அழகியா ருரை வல்லுரை யாய வாறு காண்க. இன்னும் இவர் தம் முரை விளக்கத் தானே உவமையை ஒரு தனி யளவையாகக் கொண்டார். போலும். அஃது அற்றன்றென்பது சித்தாந்தத் துணிபாத லறிக.

இப் பாட்டு என் னுதலிற்றோ வெனின்: ஊன்கண் கருத் தின்றி அதனை யுண் கிறே னென்று கூறி அரு ளுடைமைச் சாதனஞ் செய்து நின்றார்க்குச் சுவை பற்றி ஊன் சிந்தை மேற்பட்டுச் சாதனத்தைத் தவறச் செய்து அருளாட்சியையுங் கெடுக்கு மாகலான், அன்னார் அவ் வாட்சி வேண்டின் ஊ னுண்டலை யொழிவாராக. எ-து.

5. தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப் பொருட்டா லூன்றருவா ரில்.

(இ-ள்.) தினற் பொருட்டால் உலகு கொல்லாது எனின்—அறியாமை யாகிய காரணத்தா னன்றி ஊன் றின் கையாகிய காரணத்தானே உலகத்தார் உயிர்க் கொலை செய்யா ரெனின்; விலைப் பொருட்டால் ஊன் றருவார் யாரும் இல்—பொருளாகிய காரணத்தானே ஊன் விற்பார்

யாவரும் இல்லை, ஆகலான் அருளாட்சி விழைபவர் உண்ணுமை வேண்டும் புலால். எ-று.

தினற் பொருட்டு, விலைப் பொருட்டு என்பன பண்புத் தொகைகள். மூன்ற னுருபு இரண் டிடத்தும் அதனி னுதல் என்னும் காரக வேதுப் பொருளில் நின்றது. உலகு என்றது ஈண்டு மக்களை. அவ்வாறு கொல்லாமையே இயல் பென்பார் 'எனின்' என்றார். யாவரும் எனற் பாலது யாரு மென இடைக் குறைந்து நின்றது. உம்மை முற் றும்மை. ஊன்றருவார் இரண்டாம் வேற்றுமைத் தொகை.

அறியாமை யாகிய காரணத்தானே உயிர்க் கொலை சிலர் செய்து நின்று, அ த னு ற் பெறப்பட்ட ஊனைக் காயங்களான் இனிதாக்கித் தர, அதனை யுண்டு நின்று அருளுடைமைச் சாதனஞ் செய்வார்க்கு அருளாட்சிக் கேடு எவ்வாறு வரும் என்றற்கு, அறியாமை யாகிய காரணத் தானன்றி, ஊன் றின்கை யாகிய காரணத்தானே உயிர்க் கொலை நிகழ்தலின், அவ்வூன் றின்கை பாவத்தை விளைத்து, அருளாட்சிக் கேடு பயக்கு மென்பதை அறிவுறுத்துவா ராய், ஊன்றின்கை ஊன் கொள்ளலையும், ஊன் விற்றல் கொலையையும் பயக்கு மென்பதைக் கருத்திற் கொண்டு, ஊன் றின்கை கொலையைப் பயப்பிக்கா தெனின், ஊன் கொள்ளல் ஊன் விற்றலைப் பயப்பிக்கா தென்பது படக் கூறினு ராயிற்று.

அவர் கூறிய அவிநாபாவத்தின் மெய்ம்மையைச் சாதித்தற் பொருட்டு அவர் கருத்திற் கொண்டனவற்றை யாமுங் கருத்திற் கொண்டு, அவர் தந்த அவிநாபாவத்தின் முன்னெடுப்பை யுடம்பட்டுப் பிற் பூட்டை மறுத்து ஊன் றின்கை கொலையைப் பயப்பிக்கா தெனின், ஊன் கொள்ளல் ஊன் விற்றலைப் பயப்பிக்கு மென்பே மாயின், ஊன் றின்கை கொள்ளலையும், கொள்ளல் விற்றலையும், விற்றல் கொலையையும் பயப்பிக்கு மென லாகும். ஆக, ஊன்றின்கை கொலையைப் பயப்பிக்கு மென்பதே பெறப் படும். இஃது முன்னெடுப்பை மறுத்தவா ருகும். பிற் பூட்டை மறுக்க முன்னெடுப்பும் மறுக்கப்படுதல் பற்றி, முன்னெடுப்பை உடம்படப் பிற் பூட்டும் உடம்பட வேண்டிய தாகும். இதனுனே ஊன் றின்கை கொலையைப் பயப்பிக்கா தெனின், ஊன் கொள்ளல் ஊன் விற்றலைப்

பயப்பிக்காது என்றும், அவிநாபாவத்தின் மெய்ம்மை பெற்றும். இனி, இம் மெய்ம்மையை ஏற்று நின்று, கொள்ளல் விற்றலைப் பயப்பிக்கு மென்பது எல்லாரும் அறியக் கிடந்த தொன்ருகலான், ஊன் கொள்ளல் ஊன் விற்றலைப் பயப்பிக்கா தென்பதை மறுக்க ஊன் றின்கை கொலையைப் பயப்பிக்கா தென்பது மறுக்கப்படும். அஃதாவது, ஊன் றின்கை கொலையைப் பயப்பிக்கு மென்ப தாகும். இனிக், கொலை பாவத்தை உண்டாக்கி அருளாட்சிக் கேடு பயக்கு மென்பதனுனே ஊன் றின்கையுங் கொலை வாயிலாக அவ்வாறு செய்யு மென்று கூறியவாருயிற்று.

இன்னும், ஊன் றின்கை யாகிய தொழிற் பண்பு தின்பார் மாட்டு நின்ற ஊன் றின்கை யென்னுங் குணப் பண்பைப் புலப்படுத்தி நிற்ப, இக்குணப் பண்பே ஏதுவாகக் கொலை செய்வார் மாட்டு நின்ற கோறலாகிய குணப் பண்பு காரியப்பாடடைந்து, பாவம் பயக்குங் கொலை யாகிய தொழிற் பண்பாகும். இதனுற் போந்தது என்னையோ வெனின், தின்பார் மாட்டு நின்ற ஊன்றின்கை யென்னுந் தொழிற் பண்பு கொலை செய்வாரைப் பாவத்துட்செலுத்தி, அதனுனே ஊன் றின்பார்க்கும் பாவத்தை விளைத்து நிற்கு மென்றபடி.

இக் குறளுக்குப் பரிமேலழகர், 'பேதைமை காரணமாக வல்லது ஊன் றின்கை காரணமாக உலகங் கொல்லாதாயின், பொருள் காரணமாக ஊன் விற்பார் யாவரும் இல்லை' என்னும் உரையைத் தந்து, 'உலகு என்பது ஈண்டு உயிர்ப் பன்மை மேல் நின்றது' என்று உரை விளக்கஞ் செய்தாரெனின், ஊன்றின்கை காரணமாக உயிர்ப் பன்மை செய்யுங் கொல்லாமைக்கும், பொருள் காரணமாக மக்கள் செய்யும் ஊன் விற்காமைக்கும் அவிநா பாவ மில்லாமை யானே, அழகியார் ஆசிரியர் கருத்தைத் திரியக் கண்டாரென்க. இன்னும், உரை விளக்கத்தில் 'பின் னிகழுந் தின்கை முன் னிகழுங் கொலைக்குக் காரண மாகாமையின் தின்பார்க்குக் காரணத்தான் வரும் பாவம் இல்லை யென்ற வாதியை நோக்கி, அருத்தாபத்தி யளவையாற் காரண மாதல் சாதித்தலின், இதனுன் மேலது வலியுறுத்தப்பட்டது' என்று கூறிய வதனுனே, இவர் பின்னிகழுந் தின்கை முன் னிகழுங் கொலைக்குக் காரண மாகு மென்று கருதின

ராதல் வேண்டும். இஃது காரண மில்வழிக் காரியந் தோன்ருதென்ற நியாயத்தானே மறுக்கப்படுதல் காண்க.

இனி, மணக்குடியர் இப்பாட்டிற்குப் பொருளுரைக்குங்கால், கொல்லாதெனும் பாடத்தை விடுத்துக் கொள்ளாதெனும் பாடத்தைக் கொண்டு, 'ஆல்' என்பதை இரண்டிடத்தும் அசைநிலை யாக்கி, 'தின்னுதற்காக உலகத்தார் கொள்ளாராயின், விலைக்காக ஊன் விற்பார் யாரும் இல்லை' என்னும் உரையையும், 'இப் பாட்டுக் கொன்று தின்னுது விலைக்குக் கொண்டு தின்பார்க்குக் குற்ற மென்னை யென்ருர்க்கு அதனுலுங் கொலைப் பாவம் வருமென்று கூறிற்று' என்னும் உரை விளக்கத்தையுந் தந்தனர்.

இவர் கொள்ளாராயின் அவர் விற்கார் என்பதனுனே, அவர் கொலைக்கு இவர் தின்கை காரணமாக, இவருங் கொலைப் பாவத்திற்கு ஆளாவர் என்று மணக்குடியர் கருதினுரெனின், அஃது பெறப்படாமை காட்டுதும். இவர் கொள்ளா ராயின் அவர் விறகார் என்பது பற்றி, அவர் விற்பின் இவர் கொள்வர் என்பதே பெறப்படும். இஃதென் சொல்லியவாருே வெனின், கொலை விற்றலையும், விற்றல் கொள்ளலையும், கொள்ளல் ஊன்றின்கையையும் பயக்குமென்றவா ருகும். பிற வுயிரைத் துன்ப நிலையுட் புகுத்துதற் காரணத்தான் கொலையைப் பாவ மெனக் கொள்ளல் பொருந்து மாயினும், அக்கொலையின் வழி வந்த ஊன்றின்கையைப் பாவ மெனக் கொள்ளல் சாலாது, அவ் வகைக் காரண மில்லாமையான். இதனுனே மணக்குடியர் உரை வழீஇனு ரென்க. இனி, 'ஊன்றின்கை காரணமாக உலகத்தார் ஊன் கொள்ளா ராயின், பொருள் காரணமாக ஊன் விற்பார் யாவரு மில்லை' என்னும் பொருளைக் கொண்டாலும், ஊன் றின்கை விற்றலுக் கேதுவாகும் என்பதே பெறப்படும். ஆயின், ஊன்றின்கையைப் பாவ மெனச் சாதித்தற்கு விற்றல் கொலையைப் பயக்குமென்பதை அவாவி நிற்கு மாகலான் 'கொள்ளாது' என்னும் பாடமுஞ் சிறப்பில் பாட மென்க.

இப் பாட்டு என் னுதலிற்ருே வெனின்; அருளுடைமைச் சாதனஞ் செய்வா ராவார் அருளாட்சிக் கேடுபயக்கும் பாவம் வேண்டாராயின், ஊன்றின்னு ராகலான், அன்னூர் ஊனுண்டலை யொழிவாராக. எ-து.

(தொடரும்)

இசைத் தமிழ்ப் பாடல்.

இசையாளர் (சங்கீதம்) ப. சுந்தரேசன், கும்பகோணம்.

2. தமிழ்த்தாய் வாழ்த்து.

தமிழரசி குறவஞ்சியிலிருந்து எடுக்கப்பட்டது.

பண்மாலை

க. பண் - மேச கலியாணி

மங்கல மோங்க வளர்த்துந லந்தரு மாமொழி தாய்மொழி யே, எங்கள்
பங்குறை இன்றமு தற்றெய்வ மாகப்ப ராவுந்த மிழ்மொழி யே, இரு
செங்கையி னேந்தியெம் தாயர்மு தலுப தேசித்த செம்மொழி யே, அவர்
பொங்குமு லைதரு பாலோ டெமக்குப் புகட்டிய திம்மொழி யே, அதனால்
எங்கள் தமிழன்னை வாழிய வாழிய வென்றடி வாழ்த்துவமே

உ. பண் - தன்யாசி

நண்ணுமி ளமைப்ப ருவத்தி லேமுதல் நாவைய சைத்தமொ ழி, எங்கள்
கண்ணைத் திறந்துல கத்தை விளக்கிக்க ருத்தோடி சைத்தமொ ழி, எந்தம்
எண்ணத்தைக் கூறற்கு நானென்று முன்வந்தி ருந்தரு ருந்துமொ ழி, வேற்று
வண்ணப்பி றமொழி கற்க வுதவிய வண்மைபொ ருந்தும்மொ ழி, அதனால் —எங்கள்
தமிழன்னை

௩. பண் - பிலகரி

தொன்றுதொட் டேபேர றிவாள ரீட்டிய செம்பொருள் தேக்குமொ ழி, தன்னை
நன்றறி வார்க்கப் புதையல் திறந்திட நாளெண்ணி காக்குமொ ழி, நாங்கள்
இன்றுப டைக்கும்பெ ருமைச்செல் லாமுதல் ஈந்துபு ரக்குமொ ழி, செய்யும்
நன்றிகொன் றோருக்கும நன்னயஞ் செய்தவர் நாணவு ரைக்குமொ ழி, அதனால் —எங்கள்
தமிழன்னை

௪. பண் - கேதாரகௌளை

அஞ்செழுத் தேதமிழ்க் கென்பவர் பேதைய றிவைந கைக்குமொ ழி, சொல்லின்
அஞ்செழுத் தேயிக மும்பர முந்தரு மாமென்று ரைக்குமொ ழி, இன்னும்
எஞ்சுபி றமொழி யிற்பல தன்பேரெ ழுதற்க ரியமொ ழி, கல்லாம்
நெஞ்சுமு ருக்குந்தி ருவாச கத்தைமுன் னேகொள்பெ ரியமொ ழி, அதனால் —எங்கள்
தமிழன்னை

௫. பண் - மத்தியமாவதி

பற்றுவைத் துப்பிற நாட்டுமொ ழியைப்ப யின்றும கிழ்ந்தோ மே, நொந்து
பெற்றதா யின்முகம் பாராத குற்றத்தால் பீழித்து நைந்தோ மே, நாங்கள்
கற்றபி றகலை யைத்தாய்மொ ழிக்கண்ணே காட்டித்தி ருத்துவ மே, திசை
முற்றவு மெம்மொழி யின்வளஞ் சாற்றிமு ரசுமு ழக்குவ மே, அதனால் —எங்கள்
தமிழன்னை

குறிப்பு :—தமிழரசி குறவஞ்சி யெனும் நூல் பேராசிரியர் திருவாளர் அ. வரதநஞ்சையப் பிள்ளை யவர்களால் இயற்றப்பட்டது. அப் பாடல்கள் யாவும் இசைப்படுத்தி நம் பொழிலில் வரவிருக்கின்றது.

65 ஆவது மேளம். **பண்மாலை** தாளம்—ஆதி. (நடை மூன்றெண்).

ஆ.—சரிகமபதநிச், || தனன || தனன || தனன || தனன ||

அ.—ச்நிதபமகரிச, க. பண் - மேசகலியாணி. || தனன || தனன || தனன || தனன ||

ச்ச்ச் ச்நித பதச் நிதப	கமப தநிரி	ச்ா , , , தநி	||
மங்கல மோங்கவ ளர்த்துந லந்தரு	மாமொழி தாய்மொழி	யே , , , எங்கள்	||
ச்ரிநி ச்ச்ச் ச்ச்நி நிதப	மபப தநிக்ாரீ	ச்ா , , , தநி	||
பங்குறை இன்றமு தற்றெய்வ மாகப்ப	ராவுந்த மிழ், மொழி	யே , , , இரு	||
ரிநிநி க்க்க் ச்ரிக்ாரீ ச்ரிச்	ச்ாநித . நீ . தா . பத	நீ , , , ச்ச்	||
செங்கையி னேந்தியெம் தாயார்மு தலுப	தேசித்த செம்மொழி	யே , , , அவர்	||
கரிச ரிக்ம் ம்ாக் ரிகரி	பதச்நி தபம	கா , , பதநீ	||
பொங்குமு லைதரு பாலோ டெமக்கு	புகட்டிய திம்மொழி	யே , , அதனுல்	||
ச்ச்ச் ச்ச்ச் ச்நித நிதப	கமப தநிரி	ச்ா , , , ,	||
எங்கள் தமிழன்னை வாழிய வாழிய	வென்றடி வாழ்த்துவ	மே , , , ,	||

உ, பண் - தன்யாசி.

8-வது மேளம் — ஆ.—ச க ம ப நி ச்

அனுமத்தோடியிற் பிறந்தது. — அ.—ச் நி த ப ம க ரி ச.

தபம கமப நிநிச் நிதப	ச்ச்ச் ச்ரிநி	ச்ா , , ச்ச்	‖
கண்ணுமி ளமைப்ப ருவத்தி லேமுதல்	நாவைய சைத்தமொ	ழி , , எங்கள்	‖
க்ரிச் நிதப நிநிநி தபம	மதப கரிச	கரிசா ; , , , பம	‖
கண்ணைத்தி றந்துல கத்தைவி ளக்கிக்க	ருத்தோடி சைத்தமொ	ழி ; , , , , எந்தம்	‖
தபம நிதப நிச்நி க்ரிச்	ச்ச்நி ச்ரிநி	ச்ா , , , ச்ச்	‖
எண்ணத்தை கூறற்கு நானென்று முன்வந்தி	ருந்ததி ருந்துமொ	ழி , . , வேற்று	‖
க்ரிச் ம்க்ரி ச்நிச் க்ரிச்	பாநீசா ச்நிதாபா	காரீசா , , , கமபநி	‖
வண்ணப்பி றமொழி கற்கவு தவிய	வண்மைபொ ருந்தும்மொ	ழி , , , , அதனல்	‖

கலியாணி

எங்கள் தமிழன்னை வாழிய வாழிய வென்றடி வாழ்த்துவமே.

ங. பண் - பிலகரி.

29-வது மேளம் — ஆ.—ச ரி க ப த ச்

தீரசங்கராபரணத்திற் பிறந்தது. — அ.—ச் நி த ப ம க ரி ச.

கபத . ச்நித பதச் நிதப | தநித பமக | ரீ , , கரிசா ||
தொன்றுதொட் டேபோ றிவாள ரீட்டிய | செம்பொருள் தேக்கும்மொ | ழி , , தன்னை ||

சரிக ரிகப கபத ச்நித | பதநிதப தபபமமக | ரீ , , கப ||
நன்றறி வார்க்கப் புதையல் திறந்திட | நா . ளெண்ணி காக்கும்மொ | ழி , , நாங்கள் ||

கபத ச்ரிக் ச்ரிக்ரீ ம்க்ரீ | ச்ச்ச் ச்நிநிததா | ச்ா , ச்ச் ||
இன்றுப டைக்கும்பெ ருமைக்கெல் லாமுதல் | ஈந்துபு ரக்கும்மொ | ழி செய்யும் ||

கரிச் நிதப பதநி தபம | ச்நிதாப பமகாரி | சா , , ரிகபத ||
நன்றிகொன் றேருக்கும் நன்னயஞ் செய்தவர் | நா . ணவு ரைக்குமொ | ழி , , அதனால் ||

கலியாணி

எங்கள் தமிழன்னை வாழிய வாழிய வென்றடி வாழ்த்துவமே.

ச. பண் - கேதாரகௌளை.

28-வது மேளம் அரிகாம்போதியிற் பிறந்தது.

ஆ.—ச ரி ம ப நி ச
அ.—ச் நி த ப ம க ரி ச.

ரிமப நிசரி ம்க்ரி க்ரிச்	ச்ரிச் நிதப	பா , ரீச்	||
அஞ்செழுத் தேதமிழ்க் கென்பவர் பேதைய	ரிவைந கைக்குமொ	ழி , சொல்லின்	||
நிரிச் நிதப தபம கரிரி	மாகரீ , கரிரி	சா , மப	||
அஞ்செழுத் தேயிக மும்பா முந்தரு	மாமென்று ரைக்குமொ	ழி , இன்னும்	||
நிச்ரி ரி ரி ரி ம்க்ரி க்ரிச்	நிச்ரீச்ா ச்நிதாபா	நிச்ரிக்ரீ ரி ரி	||
எஞ்சுபி றமொழி யிற்பல தன்பேரெ	முதற்க ரி . யமொ	ழி — கல்லாம்	||
ப்ம்க் ரிக்ரி ம்ர்க்ரீ க்ரிச்	ச்நித பமக	ரீ , ரிமபநிச்ரிக்ரீ	||
நெஞ்சுமு ருக்குந்தி ருவாச கத்தைமுன்	னேகொள் பெரிய:மொ	ழி , அதனு—ல்	||

கலியாணி

எங்கள் தமிழன்னை வாழிய வாழிய வென்றடி வாழ்த்துவமே.

ரு. பண் - மத்தியமாவதி.

22-வது மேளம்
கரகரப்பிரியாவிற் பிறந்தது.

ஆ.—சரிமபநிச்
அ—ச்நிபமரிச.

ரிரிரி ரிரிரி ச்ரிச் நிபநி	பநிச் நிபம	ரீ , , பநிநீ ‖
பற்றுவைத் துப்பிற நாட்டுமொ ழியைப்ப	யின்று மகிழ்ந்தோ	மே , , நொந்து ‖
ச்ரிச் ரிச்நி பநிச்ரநி பமரீ	சரிமாரீ ரிபம	ரீ . பா ; பா ‖
பெற்றதா யின்முகம் பாராத குற்றத்தால்	பீழித்து நைந்தோ	மே . நாங்கள் ‖
பநிச் ரிரிரி ச்ரிம் ரிசநி	சரிச் நிபநி	ச்ரா , , ச்ச் ‖
கற்றபி றகலை யைதாய்மொ ழிக்கண்ணே	காட்டித்தி ருத்துவ	மே , திசை ‖
ச்ரிச் நிச்நி நிச்ரி பநிச்	பநிச்ராச்ச்நிபமரீ	சா , ; ரிமபநி ‖
முற்றவு மெம்மொழி யின்வளஞ் சாற்றிமு	ர , சு முழக்குவே	மே அதனல் ‖

கலியாணி

எங்கள் தமிழன்னை வாழிய வாழியவென்றடி வாழ்த்துவமே.

இசைத் தமிழ்

திரு. சங்கீதம் : ப. சுந்தரேசன்,
தேவார இசை யாசிரியர், அரசர் கல்லூரி, திருவையாறு.

3. இசைத் தொகுதிகளின் பெயர்கள்.

சென்ற இதழில் பொழி லன்பர்கள் ஏழிசைகளின் அடிப்படை யான பல்வேறு அமைப்புகளை நன்கு படித் துணர்ந்து இருக்கக்கூடும். இசைக ளேழி ேைசகள் ஒருங்கு கூடி ஒலிக்கின்ற காலத்தே தான் நமக்கு ஓசை யின்பங்கள் அறிய வாய்ப் பேற்படுகின்றது. இதனை நன் குணர்ந்த பழந் தமிழ் நாட்டுப் பெருமக்கள் பெரிய யாழ்க் கருவி ஒன்றைச் செய்து இசைக் கொரு நரம்பாக ஏழு நரம்புகளைக் கட்டித் தெறித்து, அந் நரம்புகளின் அளவு முறைகளையும் அறிந்து, முன்னை நரம்புகளின் அளவைச் சம கூறு செய்து, அவ்வாறே சம கூருக்கிய நரம்புகளின் அளவையும் சம கூறு செய்தே, இருபத்தொரு நரம்புகளைக் கட்டிப், பெரிய யாழ் எனும் பொருள்படப் பேரியாழ்க் கருவி யெனக் கூறினர்.

அவ்வா றமைக்கப் பெற்ற பேரியாழ்க் கருவியில் முதன் முதலில் இயற்கையி லமைந்த ஏழிசை யமைப் பின்படியே நரம்புகள் கட்டடப்பட்டன.

அவையாவன :—க. தாரம், உ. குரல், ௩. துத்தம், ௪. கைக்கிளை, ரு. உழை, சு. இளி, எ. விளரி, || அ. தாரம், கூ. குரல், ௰. துத்தம், ௰க. கைக்கிளை, ௰உ. உழை, ௰௩. இளி, ௰௪. விளரி, || ௰ரு. தாரம், ௰சு. குரல், ௰எ. துத்தம், ௰அ. கைக்கிளை, ௰கூ. உழை, உ௰. இளி, உ௰க. விளரி.

இவ் விசைகளைத் தார முதல் தார மீருக (ஏழிசைகள்) ஒரு தொகுதியாகவும், குரல் முதல் குர லீருக ஒரு தொகுதியாக வும், துத்த முதல் துத்த மீருக ஒரு தொகுதியாகவும், கைக் கிளை முதல் கைக்கிளை யீருக ஒரு தொகுதியாகவும், உழை முதல் உழை யீருக ஒரு தொகுதியாகவும், இளி முதல் இளி யீருக ஒரு தொகுதியாகவும், விளரி முதல் விளரி யீருக ஒரு

தொகுதியாகவும் கொண்டு, ஒவ்வொரு தொகுதிக்கும் தனித் தனியே பெயரமைக்கப்பட்டது. இங்குக் கொண்ட தொகுதிகள் பதினான்கு நரம்புகளைக் கொண்டே தொகுக்கப்பட்டன. மேலும், ஓரிசை முதலாகத் தொடங்கும் தொகுதியில் ஈற்றிசையானது, தொடக்கவிசையின் எட்டாமிசையானதால், அஃது இரண்டாந் தானத்ததாகும். தானம் எனுமிசைப் பகுதியை ஏற்றபெற்றி மேல்வரும் கட்டுரைகளிற் காணலாம்.

இனி, மேற் குறித்த ஏழு தொகுதிகளையும், தனித் தனியே, முதலிசை, கடையிசை, தொகுதியிசையென அட்டவணைப் படுத்தி, அவற்றிற்கு அமைந்த பெயர்களையும் எழுதிக் காட்டுவாம்.

	முதலிசை.	கடையிசை.	தொகுதியிசைகள்.	பெயர்கள்.
க.	தாரம்	தாரம் (மேற்றானம்)	தாரம் குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம்*	மேற்செம்பாலை.
உ.	குரல்	குரல் (மேற்றானம்)	குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் குரல்*	செம்பாலை

௫.	துத்தம்	துத்தம் (மேற்றனம்)	துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் குரல் துத்தம்*	படுமலைப்பாலை
௬.	கைக்கிளை	கைக்கிளை (மேற்றனம்)	கைக்கிளை உழை இளி விளரி தாரம் குரல் துத்தம் கைக்கிளை*	செவ்வழிப்பாலை
௭.	உழை	உழை (மேற்றனம்)	உழை இளி விளரி தாரம் குரல் துத்தம் கைக்கிளை உழை*	அரும்பாலை
௮.	இளி	இளி (மேற்றனம்)	இளி விளரி தாரம் குரல் துத்தம் கைக்கிளை உழை இளி*	கோடிப்பாலை

எ. விளரி	விளரி (மேற்றனம்)	விளரி தாரம் குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி*	விளரிப்பாலை

* இவ் வுடுக் குறி மேற்றனை திசையைக் குறிப்ப தாகும்.

இவ் வேழு பெரும்பாலைகளும் இன்றும் நமது நாட்டில் வழக்கி லுள்ளன. ஆனல், நான்காவ தாகிய செவ்வழிப் பாலையை ஒருவரும் வழக்கில் கொள்ளவில்லை. ஏழு பாலை களையும் அவைகள் இக் காலம் எவ் வகைப் பெயர்களோடு வழங்கி வருகின்றன வெனக் கூறுவாம்.

பாலைகள் ஏழு பழங் காலத் தமிழ்ப் பெயர்கள்	மேளங்கள் ஏழு தற்காலப் பெயர்கள்.
க. மேற்செம்பாலை	1. மேச கல்யாணி
உ. செம்பாலை	2. அரிகாம்போதி
ஙு. படுமலைப்பாலை	3. நடபைரவி
ச. செவ்வழிப்பாலை	4. சுத்ததோடி (வழக்கி லில்லை)
ரு. அரும்பாலை	5. தீரசங்கராபரணம்
சு. கோடிப்பாலை	6. கரகரப்பிரியா
எ. விளரிப்பாலை	7. அனுமத்தோடி

முத் தமிழ்த் துறைபோகிய முனிபுங்கவர் அருட்டிரு. விபுலானந்த அடிகளார் ஒருவர்தான், பழைய ஏழு பெரும் பாலைகளின் நுட்பங்களை யறிந்து, அவைகள் தற்காலம் இன் னின்ன பெயர்களோடு வழங்கி வருகின்றன வென அலகுக் கணித முறைகளா னறிந்து கூறியவர்க ளாவர்.

இக் காலம் நமது நாட்டில் இசைக் கொரு நரம்பாகக் கட்டப்பட்ட இசைக் கருவிகள் இல்லை. ஆனால், மேனாட்டார் முறையைத் தழுவிய இசைக் கருவிப் பெட்டிகள் (ஆர்மோனியம்) இருக்கின்றன. இவற்றின் இசை யோசைகள் ஒரோவழி நடுக்கு மிசை யாதலான், நம் நாட்டு அசை விசைகளின் முறையைச் சேர்ந்தவை யாகா. அன்றி, மேற் குறித்த ஏழு பாலைகளை ஏதோ ஒரே ஓசை வகையான் எளிதி னுணர இக் கருவியைக் கொண்டும் காணலாம். இந் நாட்களில், வழங்கும் பெட்டிகளில் கருப்புக் கட்டைகளைத் தொடாது, வெண்மைக் கட்டைகளை மட்டுமே வாசித்துக் கண்டால், மேற் கூறிய ஏழு மேளங்களையும் காணலாம். முதற் கட்டை முதல் ஏழு கட்டைகள் சங்கராபரணம்; இரண்டாங் கட்டை முதல் கரகரப் பிரியா; மூன்றாங் கட்டை முதல் அனுமத்தோடி; நான்காம் கட்டை முதல் மேசகல்யாணி. ஐந்தாங் கட்டை முதல் அரிகாம்போதி. ஆறாங் கட்டை முதல் நடபைரவி. ஏழாங் கட்டை முதல் சுத்ததோடி என வருவதைக் காண்டல் கூடும். இப் பெட்டிகளில் வேறொரு வகைப் பெட்டியும் உண்டு. அப் பெட்டியில் முதற் கட்டை முதலாக, மேற்செம்பாலைப் பண்ணும், பின்னர், முறையே, செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கோடிப்பாலை, விளரிப்பாலை யெனவே அமைந்த தாகும். முன்னைய பெட்டியைச் சங்கராபரண மேளப் பெட்டி யெனவும், பின்னையப் பெட்டியைக் கலியாணி மேளப் பெட்டி யெனவும் கூறுவது வழக்காம்.

துருக்கிய மொழியும், தமிழ் மொழியும்.

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளை, B. A., L. T., திருவாரூர்.

இந்திய நாட்டின் முத லமைச்சர், திரு. சவகர்லால் நேரு அவர்கள், 1948, திசம்பர், 26 ஆம் நாள், ஐதராபாத்தில் இந்திய அரசியல் மொழி பற்றிப் பேசியபொழுது கூறியதாவது:

'உங்களில் எவ்வளவு பேருக்குக் கமால் பாட்சா துருக்கிய மொழியை முன்னேறச் செய்த வகை தெரியும் என்பது எனக்குத் தெரியாது. அவர் துருக்கி மொழியில் அராபியச் சொற்கள் கலப்பதை விரும்பாததால், ஒரு செயற்குழு (கமிசன்) அமைத்து, நாட்டுப் புறங்களுக்குச் சென்று, நல்ல நாட்டு வழக்கச் சொற்களைச் சேமித்து வரச் செய்து, அவைகளைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயன்படுத்தச் செய்தார். இவ்வாறு துருக்கிய இலக்கிய மொழி பொது மக்களுடன் தொடர்புடைய தாயிற்று. அதனால் அது மிகவும் வலு வடைந் தது. இதிலிருந்து எம மொழியும் மக்களிடமிருந்து வேறு படுத்தப்பட்டால், அது அத்துணை வளர்ச்சியுருது என்பது நன்கு விளங்கும். அவ்வாறு வேறு படுத்தப்பட்ட மொழி அரசிய லாரால் அரசாங்கங்களில் பயன்படுத்தப் படலாமே யன்றி, குடியரசு, மக்கள் மன்றங்கள் வழங்குகிற இந் நாட்களில் வளர முடியாது.' (28—12—48உ இந்துப் புதினத் தாள் பார்க்கவும்).

கமால் பாட்சா துருக்கி மொழியில் அராபியச் சொற்கள் கலக்கக் கூடாது எனக் கருதியது நன் றெனின், தமிழில் சமக்கிருதச் சொற்கள் கலக்கக் கூடா தெனத் தமிழ் மக்கள் கருதுவது முறையே யாகும். நாட்டுப் புறச் சொற்களே துருக்கி மொழிக்கு அடிப்படையாக வேண்டு மெனக் கருதியது முறை யெனின், தமிழ் மொழிக்கும் அம் முறை பெரும் பய னளிக்கத் தக்கதாக வேண்டும். இதனை உணர்ந்து தமிழ் மொழிக்கும் தமிழ் மக்களுக்கும் நல்ல உற வுண்டாக்கத் தக்க தொரு செயற்குழுவை தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் அல்லது பல்கலைக் கழகத்தார் அல்லது அரசியலார் நிறுவி ஆவன புரியின் தமிழ் வளருமே யன்றி, ஆங்கிலச் சொற்களையும், சமக்கிருதச் சொற்களையும் அப்படி யப்படியே, ஒலியைக் கூடத் தமிழ்ப் படுத்தாமல், விழுங்க வேண்டு மென்றும், அதற்காகத் தமிழ் நெடுங் கணக்கையும் பெருக்கி, ஆங்கில, சமக்கிருத வகைப்படுத்த வேண்டு மென்றும் விரும்புவது எவ்வளவு மதி யுடைமை யாகு மென்பதைக் கருத வேண்டியவர்களாவோம்,

கலைக் களஞ்சியம்.

(தமிழ் வளர்ச்சிக் கழக வெளியீடு—மாதிரிப்படி)

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளை, B. A., L. T., திருவாரூர்.

மதிப்புரை.

இவ்வரும் பெரு நூலை வெளியிட முன்வந்ததற்கும் "ஆயிரக்கணக்கான அறிஞர்களின் ஒத்துழைப்பு"ப் பெற்று முடித்திட முயன்று வருவதற்கும் தமிழ் நாடு அதன் அரிய கல்வி யமைச்சர் திரு. அவிநாசிலிங்கம் செட்டியாருக்கு என் றென்றுங் கடமைப் பட்டிருக்கிறது. அவரது அரிய செல் வாக்கும், பணியும் இன்றி இவ்வரிய அறிவுப்பணி எளிதில் முற்றுறாது. தமிழ்ப் பேரகராதி (லெக்சிகன்) தொடங்கி முடிந்த காலம், முறையை நோக்க அதனினும் பன்மடங்கு வேலை கொள்ளக்கூடிய இவ்வரிய நூலை இத்தகைய தாய் மொழிப் பற்றும், முன்னேற்ற நோக்கமும், நற் பண்புகளும் நிறைந்தவரின் தலைமையின் கீழ்ப் பலப்பலரின் ஒத்துழைப் பாலன்றி இயற்றல் இயலாததாகும். வேறெந்த இந்திய மொழியும் பல்லாயிரக் கணக்கான வேற்று மொழிகளும் இன்னும் பெறாத, பெறவும் முயலாத, இப்புது வேலையை நம் நாட்டில் முதலில் தொடங்கி விரைவில் ஒரு மாதிரிப்படியை யும் வெளியிட்டிருப்பதே பெரிதும் போற்றத்தக்கதாகும்.

நூலின் அளவு, தாள், அச்சு, கூட்டம், படவிளக்கம் முதலிய யாவும் இதற்குமேல் விரும்புவதற்கில்லை எனக் கூறத் தக்கதாகும். 20 பக்கங் கொண்ட இச் சிறு நூலிலேயே

கற்று வல்ல மூதறிஞர்களும் புதிதாய்ப் புரிந்து கொளக் கூடியன பலவுள எனின் இந்நூல் முழுவதும் ஒருபெரிய அறிவுக் களஞ்சிய மாகுமென்பதற் கையமில்லை. இப்பெரு நூல் கலைக் களஞ்சியம் எனப் பொன்னெழுத்தில் பொறிக்கப் பெற்றிருப்பது பெரிதும் பொருந்தியதேயாகும்.

இந்நூலில் கலைப்படங்களும் வண்ணப்படங்களும், விளக்கப் படங்களும் "சுமார் நாலில் ஒருபங்கு" எனக்குறிப்பிடப் பட்டிருப்பினும் பாதிக்கு மேலிருப்பது தேவைக்குத் தக்கதாகவேயிருக்கிறது. அட்டைப் படத்தில் தமிழ் நாட்டில் மட்டும் தனிப் பெருமையுடன் பல்நூற்றாண்டுகளாக விளங்குகிற "விண் தாங்குவபோலும் மிகு தண் தாமரை மலராள் உரை தவளக் நெடுமாடம்*" ஆகிய எழு கோபுரம் தன் எழிலை வீசிக் கொண்டிருப்பது ஏற்புடைத்தாகும். கலையுலகிலேயே உச்சிமேற் புலவர் கொள் நடராசத் திருவுருவம் தமிழ் நாட்டிற் பிறந்து உலகெங்கணும் போற்றப் படுவதற்கேற்பத் தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் முகப்புப்படமாக விளங்குவதற்கு வேறெப் பொருளினும் சிறப்புடையதாகும் என்பதற்கு ஐயமில்லை. தமிழர் சிற்பவன்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்ற மாமல்லபுரச் சிற்பங்களுள், விலங்கினங்களிடத்துக் கலைஞர் காட்டும் ஆர்வத்தையும், அவை தமக்குள் வெளிப்படுத்திக் கொள்ளும் அன்பையும் இனிது விளக்குகின்ற சில சிற்ப நிலைகளும், தமிழர் தனிக்கோயில்களுள் பருமனிலன்றிக் கலைச்சிறப்பிலும் தலையாம் தஞ்சைப் பெரிய கோவிலும், அதனுள் விளங்குகிற உயிர் ஓவியம் ஒன்றும் முழுப்படங்களாக இந்நூலுட் காட்சியளித்துத் தமிழர் தனி நாகரிகத் தலைமையை வெளிப்படுத்துகின்றன.

இதன் கண் உள்ள 32 அரிய தலைப்புகளும் அத்தனை அருங் குணங்களுடன் இந்நூல் விளங்க இருப்பதைக் குறிக்கின்றன போலும்! திரு "இராம கிருட்டின இயக்கம்" முதலிலும், "தேவாரம்" "திருப்பாணாழ்வார்" இட்டத்தட்ட இடை

*சம்பந்தர்.

யிலும் கடையிலும் வைக்கப் பெற்றிருப்பது வேதாந்தம், சைவம், வைணவம் ஆகிய நம் நாட்டின் முன்னணியிலுள்ள மூன்று கொள்கைகளின் சிறப்பியல்புகள் விளங்குவதற்கென வைக்கப்பட்டன போலத் தோற்றமளிக்கின்றன. "சுவாமி விபுலாநந்தர் சர் சி. வி. இராமன்" ஆகிய இரு தமிழ்ப் பேரா ராய்ச்சியாளரின் புதுக் கண்டுபிடிப்புகள் விளக்கப்பட்டிருப் பது தமிழர் யாவரும் பெருமிதம் அடைதற்கு உரியனவாகும். இவர்களுடன் இராண்ட்சன் என்னும் வெளிநாட்டுக் கண்டு பிடிப்பாளரின் அறிவுக் கொடையும் போற்றப்பட்டிருப்பது தமிழரின் தலை சிறந்த பண்பாடாகிய நன்மை நயத்தலை (eclectism) நன்கு புலப்படுத்தப்படுகிறது. "மகாகவி தண்டி" எனுந் தமிழ் மகன் சமக்கிருதப் பேராசிரியராக விளங்கியும் தமிழ் அடிப்படைகளைக் கைவிடாதிருந்ததைப் போற்ற வேண்டியவர்களாவோம். "திருக்குறள்" "சிலப்பதிகாரம்" எனும் இருதலை சிறந்த தமிழ் நூல்களின் தனிச்சிறப்புக்கள் விளக்கப்பட்டிருப்பது மகிழ்வூட்டுவனவாகும். "இந்தியா உருப்பெற்ற வரலாறு", "தென் இந்திய சரித்திர முற்காலம்", இரண்டும் நம் நாடு முன்னைப்பழ நாட்டிற்கு முன்னைப்பழ நாடாகவும், உலக மக்களின் வரலாறு தொடங்கப்பெற்ற நாடாகவும் விளங்குவதென்பதை அறிவியல் துறைவாயிலாக நிறுவியிருப்பது தமிழர்களைத் தலை நிமிரச் செய்வதாகும். "வீணை" தமிழரின் தலை சிறந்த கலைச்செல்வத்தையும் "நாகார்ச்சுண கொண்டா" நம் நாட்டுக் கலைச்செல்வங்களுள் ஒன்றையும் வெளிப்படுத்துகின்றன.

(தொடரும்.)

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்.

வேண்டுகோள்.

திரு. இராதாகிருட்டின வள்ளலால் 1911-ஆம் ஆண்டு நிறுவப்பெற்ற நம் கரந்தைத் தமிழ்ச் சங்கம் தஞ்சை வழக்கறிஞர் இராவ் சாகிபு, செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள் திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்களால் போற்றி வளர்க்கப் பெற்று வந்துள்ளதைத் தமிழ் நாட்டவர் யாவரும் நன்கறிவர். திரு. பிள்ளை யவர்களின் பெரும் முயற்சி, அரிய தொண்டு, சிறந்த செல்வாக்கு இவைகளின் பயனாகவும், தமிழ்ப் பெருமக்களின் பேராதர வாலும், நம் சங்கம் தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்கும் ஆற்றியுள்ள தொண்டுகள் மிகப் பல வாகும்.

இச் சங்கம் பொதுக் கூட்டங்கள் கூட்டியும், ஆண்டு விழாக்கள் கொண்டாடியும், புலவர் திருநாட்களைச் சிறப்பாக நடத்தியும், தமிழ்த்தாயின் உயர்வையும், தனிச் சிறப்பையும், செம்மை நலத்தையும் உல கறியச் செய்துள்ளது. ஆங்கில முதலிய பிற மொழிகளில் மோகங் கொண்டு வாழ்ந்த தமிழ் மக்களுக்குத் தமிழ்ச் சுவை ஊட்டித், தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை ஓதி யுணரும் வாய்ப்புகளை அளித்துள்ளது. தம் உயர் நிலையை மறந்து தாழ்ந்த தமிழ் மக்களை, தம் பழங் காலப் பெருமை யுணர்ந்து உணர்ச்சியுடன் வீறு பெற்று எழச் செய்துள்ளது.

2. சிறந்தத் தமிழ் அறிஞர்களான திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் சுவாமிகள், மறைமலைஅடிகள், பண்டித மணி, பெரும் பேராசிரியர் கதிரேசச் செட்டியார், பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார், பேரறிஞர் (டாக்டர்) உ. வே. சாமிநாத ஐயர், மகாவித்துவான் ரா. இராகவ ஐயங்கார், பண்டித, நாவல, வேங்கடசாமி நாட்டார், பேராசிரியர் சோமசுந்தர பாரதியார், திரு. வி. கல்யாண சுந்தர முதலியார், சுவாமி விபுலாநந்த அடிகள்,

ஆசிரியர் வரதநஞ்சைய பிள்ளை, திரு. ம. நா. சோமசுந்தரம் பிள்ளை, பா. வே. மாணிக்க நாயக்கர், கரந்தைக் கவியரசு திரு. R. வேங்கடாசலம் பிள்ளை, திரு. நீ. கந்தசாமி பிள்ளை முதலியோர்களை நன்கு பயன்படுத்திக் கொள்ளப் பல வாய்ப்புக்களை இச் சங்கம் முன்னின்று செய்துள்ளது.

3. நம் தமிழ் மொழியைப் பள்ளிக்கூடப் பாடத் திட்டங்களில் உயர் தனிச் செம் மொழியாகக் கொள்ள வேண்டிய இன்றியமையாமையையும், பல்கலைக் கழகங்களில் தமிழ் மொழி உயரிடம் பெற்றுப் போற்றப் பெற வேண்டிய சிறப்பையும் நம் சங்கம் அன்று தொட்டே எடுத்துரைத்து வற்புறுத்தி வந்துள்ளது. தமிழாசிரியர்களைத் தகுதி, ஊதியம் முதலிய எல்லா வகையிலும், ஏனைய ஆசிரியர்களைப் போலவே, ஒத்தச் சிறப்பினராகக் கருதப்பெற வேண்டுமென்று முதன் முதல் வற்புறுத்தியது இச் சங்கமே யாகும். ஆங்கிலம் முதலிய பிற மொழி வரவால் வழக்கின்றி மறைந்து வந்த தக்க தமிழ்ச் சொற்களைப் பொது மக்கள் வழக்கில் கொண்டுவந்தும், மொழி வளர்ச்சிக் கேற்ற புதுச் சொற்களை ஆக்கித் தந்தும், சீரிய தொண்டு செய்தது இச் சங்கமே யாகும். அச் சொற்கள் இன்று மக்கள் வழக்கிலும், எழுத்திலும் எளிதாக வழங்கி வருகின்றன.

4. நம் சங்கத்தின் பெரும் தொண்டுகளைப் பாராட்டிச் செட்டிநாட்டரசர், வீரத் திரு. அண்ணாமலைச் செட்டியார் அவர்களும், சென்னைச் சட்ட சபையினரும், அரசியலாரும் இச் சங்கத்திற் கென ஒரு உறுப்பினர் இடத்தை அண்ணாமலைப் பல்கலைக் கழக மூதறிஞர் (செனட்) குழுவில் தந்து சிறப்பித்துள்ளார்கள். இதற் கேற்ப நம் சங்கம் அவ்வப் போது தகுந்த அறிஞர்களை அம் மூதறிஞர் குழு உறுப்பினராக அனுப்பி வருகின்றது. சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், திருப்பதி கீழ்த் திசை ஆராய்ச்சிக் கழகம், சென்னை அரசியலார், இந்திய அரசியலார், முதலியோர் தமிழ்மொழிச் சார்பான தத்தம் வெளியீடுகளை நம் சங்கத்திற்கு அனுப்பிவருகின்றனர்.

5. இப் பொதுப் பணிகளைத் தவிரச், சிறப்பு வகையில் கீழ்க் கண்ட சீரிய பணிகளையும் இச் சங்கம் செய்து வருகின்றது.

(அ.) இச் சங்கத்தின் ஆதரவில் அரியனவும் சிறந்தனவு மாய எண்ணாயிரத்திற்கு மேற்பட்ட நூல்கள் உள்ள பெரிய நூல் நிலையம் ஒன்று நடைபெற்று வருகின்றது. நாள், கிழமை, திங்கள் வெளியீடுகள் வரவழைக்கப் பெறும் படிப்பிடம் ஒன்றும் இந் நூல் நிலையச் சார்பில் நடைபெறுகின்றது.

(ஆ). மக்கள் யாவரும் கல்வி பெறுவதற் கான வசதியளிக்கத் தொடக்கப் பள்ளி ஒன்றும், நடுத்தரப் பள்ளி ஒன்றும், இச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறுகின்றன. இப் பள்ளிகள் அரசியலார் ஒப்பம் பெற்றவை. தொடக்கப் பள்ளியில் 450 மாணவர்களும், 12 ஆசிரியர்களும், நடுத்தரப் பள்ளியில் 198 மாணவர்களும், 8 ஆசிரியர்களும் உள்ளனர்.

(இ) இவ் விரு பள்ளிகளைத் தவிரச், சென்னைப் பல்கலைக் கழகத்தோடு இணைக்கப் பெற்றுள்ள கரந்தைப் புலவர் கல்லூரி ஒன்றையும் இச் சங்கம் நடத்திவருகின்றது. பல்கலைக் கழக 'வித்துவான்' தேர்வு மாணவர்கள் இதில் பயில்கின்றார்கள். இவர்கள் ஆண்டுதோறும் பல்கலைக் கழகத் தேர்வுகளில் தக்க தரத்தில் வெற்றி பெற்று வெளி வருகின்றனர்.

(ஈ) திக்கற்ற மாணவர்கள் உண்டி, உடை, உறையுள் முதலிய வசதிகள் பெற்றுக் கல்வி பயில்வதற்காகத் திக்கற்ற மாணவர் இல்லம் ஒன்றை இச் சங்கம் நடத்தி வருகின்றது. இதில் இப்பொழுது அறுபத்தைந்து திக்கற்ற மாணவர்கள் இலவச உணவு, உடை, உறையுள் பெற்றுத் தங்கிப் பல வகுப்புகளில் பயின்று வருகின்றனர்.

(உ) பல்வேறு துறைகளிலுமுள்ள சிறந்த அறிஞர்களின் கட்டுரைகள், ஆராய்ச்சிகள் அடங்கிய தமிழ்ப் பொழில் என்னும் உயரிய செந்தமிழ்த் திங்கள் வெளியீடு ஒன்றைச் சென்ற இருபத்து நான்கு ஆண்டுகளாக இச் சங்கம் வெளியிட்டுத் தமிழை வளம்படுத்தி வருகின்றது.

(ஊ) தொல்காப்பியத் தெய்வச் சிலையார் உரை, கரந்தைக் கட்டுரை, யாழ் நூல், மொழியரசி, தமிழரசி குறவஞ்சி, சுருதிவீணை, அஞ்ஞானத்தின் வழக்கீடு, உபந்நியாசங்கள், வேளிர் வரலாற்றின் ஆராய்ச்சி முதலிய உயரிய நூல்களை இச் சங்கம் அச்சிட்டு வெளியிட்டுள்ளது.

(எ) பள்ளி மாணவர்களுக்கும், ஏனைய ஏழை மக்களுக்கும் இலவச மருத்துவ வசதி யளிப்பதற்காகத் தகுதி பெற்ற மருத்துவர் ஒருவர் பார்வையில் ஒரு இலவச மருத்துவச் சாலையை இச் சங்கம் பல ஆண்டுகள் நடத்தி வந்தது.

மேலும், கரந்தைப் புலவர் கல்லூரியில் பயிலும் ஏழை மாணவர்கள் ஐம்பதின்மருக்கு இலவச உணவு பெறும் வசதியையும் இச் சங்கம் சென்ற ஆண்டு வரையில் செய்து வந்தது.

பொருள் முட்டுப் பாட்டால் இவ் விரு தொண்டுகளையும் இவ் வாண்டுமுதல் நிறுத்தி வைக்க நேர்ந்துள்ளது.

மேற் கண்ட ஒவ்வொரு பகுதிக்கும் ஆண்டு தோறும் இப்போதுள்ள வருவாய், செலவு முதலியவை கீழே தரப் பட்டுள்ளன.

		வருவாய்	செலவு	மிகுந்த செலவு.
		ரூ.	ரூ.	ரூ.
அ.	நூல் நிலையம், படிப்பிடம்	150	300	150
ஆ.	தொடக்கப் பள்ளி	8,000	8,300	300
இ.	நடுத்தரப் பள்ளி	10,000	11,000	1,000

		வருவாய்: ரூ.	செலவு: ரூ.	மிகுந்த செலவு. ரூ.
ஈ.	கரந்தைப் புலவர் கல்லூரி	3,000	8,600	5,600
உ.	திக்கற்ற மாணவர் இல்லம்	5,200	10,000	4,800
ஊ.	தமிழ்ப் பொழில்	450	500	50
எ.	நூல் வெளியீடுகள்	...	...	...
ஏ.	இலவச மருத்துவ சாலை	...	1,000	1,000
ஐ.	வித்துவான் மாண வர்க்கு உணவு	1,000	5,000	4,000
ஒ.	சங்கம் (பொது)	600	1,500	900
		28,400	46,200	17,800

இச் சங்கத்திற்கெனக் கீழ்க் கண்ட சொத்துக்கள், நிதிகள், நன்கொடைகளே உள்ளன.

அ.	நிலங்கள்: மேல்வாரம்	900	
	குத்தகை	150	1,050
ஆ.	கட்டிட வாடகை		600
இ.	திருச்சிராப்பள்ளி பழனிச் சாமி பிள்ளை அறநிலையம்		250
ஈ.	நெல் நன்கொடை }		600
உ.	நன்கொடை }		
			2,500

இப் புள்ளி விவரங்கள் மூலம் செலவிற் கேற்ற போதிய வருவாய் இல்லாமை நன்கு புலனாகும்.

அதிகப் பொறுப்பு 15,300; ஏறத்தாழ 15,000.

இதை மூன்று வட்டி பெறும் முதலாக்க, ஐந்திலக்க (ரூ. 5,00,000) ரூபா யாகும்.

தமிழவேளின் தளரா ஊக்கத்தாலும், பெரும் முயற்சியாலும், சலியா உழைப்பாலும் தோன்றிய மேற்கண்ட அரும பணிகள் சிலவற்றைப் பொருள் முட்டுப்பாடு காரணமாகக் கைவிட நேருமென்று அஞ்சுகின்றேம். இந் நிலையில், ஒரு பெருந் தொகையை நிலைத்த நிதியாக இச் சங்கத்திற்கென ஏற்படுத்தினல், அதன் வருவாயைக் கொண்டு பொருள் முட்டுப்பாடின்றி மேற்கண்ட அருந் தொண்டுகளை என்றும் தொடர்ந்து ஆற்றி வரலாம் என்னும் உண்மையைப் பலபேரன்பர்கள் ஒப்பி எழுந்து, அவர்களால் இயன்ற பொருளையும் கொடுத் துதவினர். அப் பேரன்பர்கள் நல்லுரையை மனங்கொண்டு ஐந்து இலக்கம் ரூபாயை ஒரு நிலைத்த நிதியாக்கி வைக்கப் பொருள் திரட்ட முற்பட்டுள்ளோம். இந் நிதி அரசியலார் (சர்க்கார்) கடன் பத்திரங்களில் போடப்பெறும். அதன் வருவாயைக் கொண்டு மேற் கூறிய தொண்டுகள் முட்டின்றி நடைபெறத் திட்டங்கள் வகுக்கப்பெறும்.

இந் நிதியைத் திரட்டுவதற்காக அடியில் குறிப்பிட்டுள்ள அன்பர்கள் அடங்கிய நிதி சேர்க்கும் குழு ஒன்று சங்கத்தின் சார்பாக ஏற்பட்டுள்ளது.

பழங் குடி மக்களாகிய தமிழ் நாட்டவர்களும் ஏனைய அன்பர்களும் இச் சீரிய பணியில் ஈடுபட்டு, இயல்வது கரவாமல், மன முவந்து இந் நிதிக்கு உதவ வேண்டுகின்றேம். நிதி அனுப்ப விரும்புவோர் இக் குழுவின் தலைவர் பெயருக்கு அனுப்பலாம்.

வாங்கும் கவளத்து ஒருசிறிது வாய்தப்பின்
தூங்கும் களிறோ துயருறாது—ஆங்கதுகொண்டு
ஊரும் எறும்பிங்கு ஒருகோடி உய்யுமால்
ஆரும் கிளையோடு அயின்று.

நிதி திரட்டும் குழுவினர்.

தலைவர்.

இராவு பகதூர், முத்தமிழ் வள்ளல்,
ஆ. யா. அருளானந்தசாமி நாடார், தஞ்சை.

உறுப்பினர்.

R. கந்தசாமி மூப்பனார், B. A., B. L., கும்பகோணம்
மு. சி. சா. இரத்தினசபாபதி செட்டியார் கும்பகோணம்
C. இராமசாமி முதலியார், B. A., B. L., கும்பகோணம்
C. கனகசபைச் செட்டியார், மாயவரம்
T. திருவேங்கடம் பிள்ளை, சீர்காழி
C. மருதவாணம் பிள்ளை, மேனங்குடி
V. P. காயாரோகணம் பிள்ளை, நாகப்பட்டினம்
S. R. நாயுடு, நாகப்பட்டினம்
இராவு பகதூர்,
N. R. சாமியப்ப முதலியார், நெடும்பலம்
K. மனத்துணைநாத தேசிகர், B. A., வலிவலம்
K. S. சாம்பசிவய்யர், மன்னார்குடி
S. சாமிநாத உடையார், மன்னார்குடி
G. பாலகிருட்டின முதலியார், மன்னார்குடி
R. கோவிந்தசாமி மூப்பனார், சுந்தரப்பெருமாள்கோயில்
K. மருதநாயகம் பிள்ளை, சீர்காழி
பெ. ராம. ராம. சித. சிதம்பரம் செட்டியார்,
புதுக்கோட்டை
உ. ராம. மெ. சுப. சேவு. மெ. மெய்யப்ப செட்டியார்,
தேவகோட்டை
மா. தருமலிங்கத் தேவர், முத்துப்பேட்டை
V. S. தியாகராச முதலியார், B. A., திருவாரூர்
G. இராமாநுச முதலியார், திருவாரூர்
இராவு பகதூர்,
அ. வீரையா வாண்டையார், பூண்டி
A. கிருட்டினசாமி வாண்டையார், பூண்டி

உறுப்பினர்.

வ. ம. துரைராச பிள்ளை, கரந்தை
நா. லெ. சின்னகிருட்டின நாயுடு, கரந்தை
N. L. M. கந்தசாமி பிள்ளை, தஞ்சாவூர்
இராவு சாகிபு,
A. Y. S. பரிசுத்த நாடார், தஞ்சாவூர்
P. A. யாகப்ப நாடார், தஞ்சாவூர்
இராவு சாகிபு,
S. சுயம்பிரகாசம், B. A., B. L., தஞ்சாவூர்.
T. D. மகாலிங்கம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை
தி. கி. நாராயணசாமி நாயுடு, திருப்பாதிரிப்புலியூர்
வ. சுப்பையா பிள்ளை, திருநெல்வேலி.

* * * *